விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valamppurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 16 வியாழக்கிழமை (01.08.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 225

பயங்கரவாத தாக்குதல் தொடர்பான

## புலனாய்வு தகவல்களை இராணுவத்திற்கு தெரிவிக்கவில்லை

### தெரிவுக்குழுவில் மகேஸ் சேனநாயக்க சாட்சி



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து முன்கூட்டியே வெளியாகியிருந்த புலனாய்வு தகவல்கள் குறித்து இராணுவத்திற்கு அறிவிக்கப்படவில்லை என 23

## அவசரகால சட்டத்தை நீடிக்க பாராளுமன்றம் அங்கீகாரம்

### ஆதரவாக 42 வாக்குகள்; எதிராக 2 வாக்குகள்

(கொழும்பு)

அவசரகால சட்டம் மூன்றாவது முறையாக நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அவசரகால சட்டத்திற்கு ஆதரவாக 42 வாக்குகளும், எதிராக 2 வாக்குகளும் அளிக்கப்பட்டன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் அவசரகால சட்டம் நீடிப்பதற்கான வாக்கெடுப்பு நேற்று இடம் பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற 23

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில்
பொறுப்பை நிறைவேற்றாத அதிகாரிகள்

# பழியை என் மீது சுமத்தி தப்பிக்கப் பார்க்கிறார்கள்

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் உரிய அதிகாரிகள் தங்கள் பொறுப்பை நிறைவேற்றியிருந்தால், அது தொடர்பில் எனக்கு அறிவுறுத்தியிருந்தால் தாக்குதலை தடுத்திருக்கலாம். ஆனால் இறுதியில் என்னையும் குற்றவாளியாக்கி தப்பிக்கப் பார்க்கிறார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ், முஸ்லிம் ஆதரவுடன் மொட்டின் ஆட்சி மலரும் – பசில்

(கொழும்பு)

தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவுடன் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான 23


## விடுதலைப்புலிகளின் தொலைநோக்கி

### முள்ளிவாய்க்காலில் மீட்பு


23

## திருகோணமலை - கன்னியாவில் ஆடி அமாவாசையை குழப்ப

### பிக்குகள் அதிஸ்டான பூசை



(திருகோணமலை)

ஆடி அமாவாசை விரதமான நேற்று திருகோணமலை - கன்னியா வெந்நீருற்று சிவாலயத்தில் பிதிர்க்கடன் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இங்கு வருகை தந்த பக்தர்கள் கன்னியா வெந்நீருற்றில் 24

பிதிர்க்கடன்களை செலுத்த

## கீரிமலையில் ஆயிரக்கணக்கில் குவிந்த பக்தர்கள்

(யாழ்ப்பாணம்)

ஆடி அமாவாசை தினமான நேற்று யாழ்ப்பாணம் புனித பூமியான கீரிமலைப் பிரதேசத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் இறந்தவர்களுக்காக பிதிர்க்கடன் செலுத்த குவிந்தனர்.

நேற்றுக் காலை கீரிமலை தீர்த்தக் கரையில் நீராடுவதற்காக நகுலேஸ்வர பெருமாள் பக்தர்கள் புடை சூழநீராடினார். நேற்றைய தினம் கீரிமலை தீர்த்தக் 23

அவசரகாலச்சட்டம்

## தமிழர்களை ஒடுக்கவே

### சபையில் சிறீதரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டமும் அவசரகாலச் சட்டமும் தமிழர்களை ஒடுக்கும் நோக்கிலேயே கொண்டுவரப்பட்டுள்ளதாக 24

தனக்கு எதிராக செயற்படுவோரை கட்டுப்படுத்த

## அவசரகால சட்டத்தை அரசு பயன்படுத்துகின்றது

### பாராளுமன்றில் ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அவசரகால சட்டத்தை பயன்படுத்திக்கொண்டு அரசாங்கத்துக்கு எதிராக செயற்படுபவர்களை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதன் ஓர் அங்கமே உரிமை போராட்டம் மேற்கொண்ட வெளிவாரி பட்ட 24

## ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு இலங்கையில் நேரடியாக தாக்குதலை நடத்தவில்லை

### ஆதாரங்கள், ஏறிப்பதிவுகள் உள்ளதென இராஜாங்க அமைச்சர் ருவான் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐ. எஸ் பயங்கரவாதிகள் இலங்கையில் நேரடியாக தாக்குதல் நடத்தவில்லை. அவர்கள் இங்கு சஹ்ரானை வழிநடத்தவும் இல்லை. எனினும் ஐ.எஸ் பயங்கரவாத கொள்கைக்கு இவர்கள் ஈர்க்கப்பட்ட காரணத்தினால் 23

தமிழர் நலனில் அக்கறையுள்ளவர்கள்

## எழுக தமிழ் பேரணியை எதிர்க்க மாட்டார்கள்

### ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் 23

## போதையில் ஏற்பட்ட வாக்குவாதம் இரட்டைக்கொலையில் முடிந்தது

### கிளிநொச்சியில் தாய், மகனை கொலை செய்த அயல் வீட்டுக்காரர் பொலிஸில் வாக்கு மூலம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தாயையும் மகனையும் வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டில் அயல் வீட்டில் வசிக்கும் குடும்பத்தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில் தாயையும் அவரது மகனையும் சந்தேகநபர் வெட்டிக் கொலை 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளில் சுகாதாரத் தொழிலாளி பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புதல் - 2019

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01ஆம் திகதி முதல் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்கமையவும், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களின் NP/14/1/ET/Un.Sche/38/Pallai. PSஆம் இலக்க 2019.07.10ஆம் திகதிய கடிதத்திற்கமைவாகவும் சுகாதாரத் தொழிலாளி பதவியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வெற்றிடங்களின் விபரம்**

| இலக்கம் | பதவிப் பெயர் | தரம் | வெற்றிடம் |
|---|---|---|---|
| 01 | சுகாதாரத் தொழிலாளி | 111 | 02 |

**சம்பளம்**

2016.02.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 இற்கு அமைய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் **PL 1 – 2016** ஆகும். இதற்கமைய மாதாந்தம் **24,250 -10X250-10X270-10X300-12X330-36,410** என்ற சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர். சம்பளம் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 இன் உப அட்டவணை II இற்கமைவாக வழங்கப்படும்.

**சேவை நிபந்தனைகள்**

1. இப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குள் விண்ணப்ப இறுதித் தினத்தன்று 05 வருடங்களுக்குக் குறையாத காலப்பகுதி தொடர்ச்சியாக வசித்து வருபவராகவும் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். (கிராம அலுவலரால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழ் / வாக்காளர் இடாப்பின் மூலப் பிரதிமூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**கல்வித் தகைமை**

1. கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச்சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் மேலதிக தகைமைகள் அனுபவம் என்பன விசேட தகைமைகளாகக் கருத்தில் கொள்ளப்படும்.
2. மேற்குறிப்பிட்ட பதவியில் இலக்கம் 1இல் குறிப்பிட்ட கல்வித் தகைமையுடன் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் தரம் 8 சித்தி கவனத்தில் கொள்ளப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்டநேர்முகப்பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளுக்கு அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**நேர்முகப் பரீட்சையின் போதான புள்ளியிடல் முறை**

| புள்ளியிடல் முறைக்கான பிரதான தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளி | தெரிவு செய்வதற்கான ஆகக்குறைந்த மதிப்பீட்டுப்புள்ளி |
|---|---|---|
| கல்வித் தகைமை | 50 | 20 |
| தொழில் தகைமை | 25 | 10 |
| மனப்பாங்கும் தொடர்பாடலும் | 25 | 10 |

**விண்ணப்பிக்கும் முறை**

1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா 100.00 ஐச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
2. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு "செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
4. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்படுதல் வேண்டும்.
5. ஆட்சேர்ப்புத் திட்ட விதி முறைகளின் படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்திற்கு பின்னராகவோ, நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் நிறுத்தப்படும்.

**விண்ணப்பத்தை உறுதிப்படுத்தல்**

விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பத்தினை தமது பிரிவுக்கான கிராம உத்தியோகத்தரின் மூலம் உறுதிப்படுத்தி அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி**

2019.08.23 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
நியமிக்கப்படுவோர் தொகையும், நியமனத் திகதியும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையும் அல்லது ஏதேனுமொரு எண்ணிக்கையை நிரப்பாமலிருக்க நியமன அதிகாரிக்கு இடமுண்டு.

**குறிப்பு:** பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் இதுவரை காலமும் சுகாதாரத் தொழிலாளி பதவி வெற்றிடம் தொடர்பாக பத்திரிகையில் விளம்பரம் செய்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் எம்மால் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் புதிதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றது.

2019.07.31

**செயலாளர்,**
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.

(C-7159)

# விமான நிலையங்களை தரமுயர்த்துவதற்கு

## அமைச்சரவை ஒப்புதல்

(கொழும்பு)

பலாலி, மட்டக்களப்பு மற்றும் இரத்மலான ஆகிய மூன்று விமான ஓடுதளங்களிலும் வணிக சேவை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவற்றை பிராந்திய விமான நிலையங்களாகத் தரமுயர்த்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவையிலே இந்த ஒப்புதல் வழங்கப்பட்டது.

கடந்த சில வருடங்களில் உள்ளக விமான சேவையை மேம்படுத்துவதற்காக அரசால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் கீழ் மட்டக்களப்பு விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யவும் இரத்மலான விமான நிலையத்தை சிவில் விமான நிலையமாக வசதி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்தோடு பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைவாக சம்பந்தப்பட்ட தரத்திற்கு அமைய வெளிநாட்டு விமானத்தில் பயணத்தை மேற்கொள்ளும் பிராந்திய வணிக சேவை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்த விமான நிலையங்களில் உறுதி செய்யுமாறு இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் இந்த விமான நிலையங்களில் சட்ட ரீதியில் பணிகளை மேற்கொள்வதற்காக தேசிய எல்லை நிர்வாக விதிமுறைகளை தயாரிப்பதற்காக சிவில் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. (ம-3)

–கொழும்பில் வைக்கப்பட்டுள்ள–

# வெளிநாட்டு குப்பைகளை நகர்த்த முடியாது

## நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலும் கொழும்பு துறைமுகப்பகுதியிலும் வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு குப்பைகள் அடங்கிய கொள்கலன்களை நாட்டின் வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. நேற்று இந்த அதிரடி உத்தரவை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுற்றாடல் நீதிமன்றம் தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை விசாரணை செய்யவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதியளித்தது. (ம-3)

## பொலிஸ்மா அதிபர் பூஜிதவின்

# அடிப்படை உரிமை மனு ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியினால் தனக்கு கட்டாய விடுமுறை அளிக்கப்பட்டமை சட்டவிரோதமானது என அறிவிக்குமாறு குறிப்பிட்டு பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தாக்கல் செய்த மனு மீதான பரிசீலனையை உயர் நீதிமன்றம் செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி வரை ஒத்தி வைத்துள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான எல்.டீ.பி. தெஹிதெனிய மற்றும் எஸ். துரைராஜா ஆகியோர் உள்ளடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று குறித்த மனு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மனுதாரரான கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர மன்றில் ஆஜராகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

**வேலையாள் தேவை**

சமையல் வேலை தவிர்ந்த ஏனைய வீட்டு வேலைகள் செய்வதற்கு (கொழும்பில்) 35 - 55 வயதுக்கு உட்பட்ட பெண் வேலையாள் தேவை.

தொடர்பு: 0772849705


**தேவை**

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள அலுவலகம் ஒன்றுக்கு அலுவலக உதவியாளராகப் பணிபுரிவதற்கு பெண் ஊழியரைத் தேடுகிறோம். கொம்பியூட்டர் அறிவு எதிர்பார்க்கப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் தங்கள் சுயவிபரத்தை மின்னஞ்சலுக்கு அனுப்பவும். (C-7162)

Email:thirumanam8@gmail.com
T.P: 077 843 6515, 075 970 1301
0114377728129

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சுயாதீன விசாரணைக்குழு வேண்டும்

## ஆளும், எதிர்க்கட்சிகள் மீது கர்தினால் அதிருப்தி



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணைக்குழு ஒன்று நிறுவப்பட வேண்டுமென கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார்.

ஆளும் கட்சி மட்டுமன்றி எதிர்க்கட்சிகளும் உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் தொடர்பிலான பொறுப்புக்களை உரிய முறையில் மேற்கொள்ளவில்லை எனவும் கர்தினால் குற்றம் சாட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நிறுவப்பட்டுள்ள ஆணைக்குழு பக்கச்சார்பானது எனவும் வெளிப்படைத்தன்மையற்றது எனவும் கர்தினால் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாக இந்த அழிவு பற்றிய சுயாதீனமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தினார். (இ-7)

---

## விடுதலைப்புலிகள் காலத்தில் இருந்த தொழில்நுட்பமே இன்றும் இருக்கின்றது

### இராணுவத் தளபதி கவலை


(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்தில் இருந்த தொழில்நுட்பமே தற்போதும் விமான நிலையத்தில் இருப்பதாகவும் தொழில்நுட்ப ரீதியாக இலங்கை முன்னேற வேண்டும் என்றும் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் நேற்று புதன்கிழமை முன்னிலையாகி சாட்சியம் வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "குறிப்பாக பண்டாரநாயக்க விமான நிலையத்தில் காணப்படும் தொழில்நுட்பம் குறித்து நான் கவலையடைகின்றேன்.

ஆவணங்களில் மேற்கொள்ளப்படும் பதிவுகளை விடுத்து மாறாக கணனி தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, நாட்டிற்குள் நுழைபவர்கள் தொடர்பாக எளிதில் கண்டுபிடிக்கக்கூடிய ஒரு அமைப்பு இருக்கவேண்டும் அதன் பிரகாரம் விமான நிலை யத்தில் பயோமெட்ரிக்ஸ்இருக்க வேண்டும்



விடுதலைப்புலிகளுடனான யுத்தம் நிறைவுக்குவந்து 10 ஆண்டுகள் ஆகின்றபோதும் நாடு அதன் பாதுகாப்பு முறைகளை மேம்படுத்தவில்லை. இவ்வாறு இலங்கை தொழில்நுட்ப ரீதியாக மிகவும் பின்தங்கியுள்ளது. இத்துறையில் நாடு மேலும் முன்னேற வேண்டும்.

இதேவேளை போருக்குப் பிறகும் வெடிபொருட்கள் மீட்கப்பட்டன, கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் அந்த நடவடிக்கைகளின் போது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் எங்களுக்கு ஒத்துழைக்கவில்லை" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

---

### விளையாட்டுப் பயிற்சியின் போது

## மயக்கமுற்று விழுந்த மாணவன் உயிரிழப்பு!

(கம்பஹா)

விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்ட பாடசாலை மாணவர் ஒருவர் மயக்கமுற்று விழுந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று கம்பஹா, சப்புகஸ்கந்த பகுதியில் இடம்பெற்றது.

சப்புகஸ்கந்த பகுதியில் உள்ள பாடசாலையில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் பாடசாலை மைதானத்தில் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்டபோது திடீரென மயக்கமுற்று கீழே விழ்ந்துள்ளார்.

இதையடுத்து குறித்த மாணவனை கிரிபத்கொடையில் உள்ள அரச வைத்தியசாலைக்கு கொண்டும் செல்லும் வேளையில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 17 வயது அருணா தனஜய ஹெட்டியாரச்சி என்பவர் ஆவார்.

உயிரிழந்த மாணவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிரிபத்கொட அரச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

---

## பாம்புக்கடிக்கு இலக்கான சிறுமி வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-கெற்பேலிப் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை காலை பாம்புக்கடிக்கு இலக்கான சிறுமி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

குறித்த சிறுமி தவறுதலாக பாம்பை மிதித்த போதே பாம்புக் கடிக்கு இலக்கானார். கெற்பேலி - மிருசுவிலைச் சேர்ந்த 12வயதுச் சிறுமியே இவ்வாறு பாம்புக் கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகிறார். (இ-5-30)

---

## "பிரிவினையின் வித்தான" ஐ.தே.கவிற்கு எதிராக பட்டதாரிகள் போராட்டம்



(திருமலை)

'பிரிவினையின் வித்தான ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசே, அரசியல்வாதிகளையும் அரசியல் கட்சிகளையும் பிரித்தாளும் தந்திரோபாயத்தை பட்டதாரிகளிடத்தில் பிரயோகிக்காதே' என வலியுறுத்தி திருகோணமலையில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் நேற்று புதன்கிழமை காலை கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

உள்வாரி, வெளிவாரி, உள்நாட்டு பல்கலைக்கழகம், வெளிநாட்டு பல்கலைக்கழகம் மற்றும் எச்.என்.டி.ஏ, எச்.என்.டி.ஈ என பாகுபடுத்தி இலங்கையின் எதிர்கால சந்ததியின் மனதில் பிரிவினைவாதத்தை விதைக்க வேண்டாமென போராட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள் வலியுறுத்தினர்.

மேலும் படித்த பட்டதாரிகள் அனைவருக்கும் பட்டம் பெற்ற ஆண்டின் அடிப்படையில் வேலை வாய்ப்பினை வழங்கவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அத்தோடு, குறித்த கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினை ஆர்ப்பாட்ட இடத்திற்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரனிடம் கையளித்தனர்.

அதன்பின்னர் கிழக்கு மாகாண ஆளுநரை போராட்டக்காரர்கள் சிலர் சந்தித்து கலந்துரையாடினர். அதனைத்தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு வந்த ஆளுநர், பட்டதாரிகளது கோரிக்கைகளை கேட்டறிந்தார். இதன்போது ஆளுநரிடமும் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது. (இ-7)

---

## மகிந்தவின் பொதுஜன பெரமுன ஒன்றிணைந்த கூட்டணியில் களமிறங்கும்

### டளஸ் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பெற்ற அரசியல் கட்சிகளை ஒன்றிணைக்கும் புதிய கூட்டணி தற்போது வெற்றிப் பெற்றுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன ஒன்றிணைந்த கூட்டணி என்ற பெயரில் செயற்படத் தீர்மானிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவித்தல் இம்மாதம் ஆறாம் திகதி அறி விக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த நான்கு வருடகாலமாக பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைந்து செயற்படும் அரசியல் கட்சிகள் இதுவரையில் உத்தியோகபூர்வமான ஒப்பந்தத்தின் ஊடாக இணையவில்லை.

அனைத்து தரப்பினரின் எதிர்பார்ப்பும் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக செயற்படுவதாக காணப்பட்டது.

தற்போது அனைத்து தரப்பினருடன் ஒன்றிணைந்து முறையாக செயற்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆஷஸ் 'போர்' இன்று ஆரம்பம்

## ◉ சொந்த மண் இங்கிலாந்துக்கு சுகம் கொடுக்குமா?

## ◉ கிண்ணத்தை தக்கவைக்குமா அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷஸ் டெஸ்ட் தொடர் இன்று தொடங்குகிறது. சொந்த மண்ணில் உலக கிண்ணம் வென்ற உற்சாகத்தில் உள்ள இங்கிலாந்து, ஆஷஸ் கிண்ணத்தையும் கைப்பற்றி சாதிக்கும் என நம்பப்படுகிறது.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, பாரம்பரியமிக்க ஐந்து போட்டிகள் கொண்ட 'ஆஷஸ்' டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடராகவும் கணக்கில் கொள்ளப்படும் என்பதால் தொடரில் விறுவிறுப்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்து அணி சமீபத்தில் உலக கிண்ணத்தை வென்ற உற்சாகத்தில் களமிறங்குகிறது. இருப்பினும் முன்னணி வீரர்கள் அடங்கிய அணி, அயர்லாந்துக்கு எதிராக 85 ஓட்டங்களுக்கு சுருண்டதால் சற்று சோகத்தில் உள்ளனர். இதனால் அணித் தலைவர் ஜோ ரூட், துடுப்பாட்ட வரிசையில் 3வதாக களமிறங்க உள்ளார். பேர்ன்ஸ், ஜேசன் ரோய் 'முன்வரிசையில்' கைகொடுக்கும்.



ஆஷஸ் கிண்ணத்துடன் இங்கிலாந்து அணித்தலைவர் ஜோ ரூட் (இடது) ஆஸி அணித் தலைவர் பெய்ன்

தவிர, பேர்ஸ்டோவ், மொயீன் அலி, 'சகலதுறை வீரர்', துணைத் தலைவர் ஸ்ரோக்ஸ், பட்லர் ஓட்டங்கள் சேர்க்க உதவலாம்.

பந்துவீச்சைப் பொறுத்த வரையில் இங்கிலாந்து அணிக்காக அதிக விக்கெட் சாய்த்த 'நம்பர்- 1' பந்துவீச்சாளர் அண்டர்சன், இவரது 'சகா' ஸ்ரூவேர்ட் பிரோட் தங்களது அனுபவத்தை வெளிப்படுத்த காத்திருக்கின்ற னர். உலக கிண்ணத் தொடரில் 20 விக்கெட்டுக்களைச் சாய்த்த இளம் ஜோப்ரா ஆர்ச்சருக்கு அணியில் இடம் கிடைக்காதது ஏமாற்றம் தான்.

**பெய்ன் அணித் தலைவர்**

கடந்த ஒரு ஆண்டாக டெஸ்ட் அணியில் பங்கேற்காமல் இருந்த ஸ்மித், வோர்னர், பான்கிராப்ட் கூட்டணி மீண்டும் அவுஸ்திரேலிய அணிக்காக களமிறங்குகிறது. இது அணிக்கு நல்ல விடயம்தான் என்றாலும், உலக கிண்ணத் தொடரின் அரையிறுதியில் இங்கிலாந்திடம் வீழ்ந்தது சற்று அதிர்ச்சிதான்.

கடந்த 2001ல் ஸ்ரீவ் வோ தலைமையிலான ஆஸி அணி இங்கிலாந்து மண்ணில் ஆஷஸ் கிண்ணம் வென்றது.

இதன்பின் 18 ஆண்டுகளாக இங்கிலாந்து மண்ணில் சாதிக்க முடியவில்லை. இங்குள்ள 'சுவிங்' ஆடுகளங்கள் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களுக்கு தொல்லையாக உள்ளது. இம்முறை வோர்னர், ஸ்மித் உள்ளிட்ட அனுபவ வீரர்கள் உதவலாம்.

தவிர கவாஜா, மிட்சல் மார்ஷ் அணியில் உள்ளனர். பந்துவீச்சில் மிட்சல் ஸ்டார்க், ஹேசல்வுட், பீற்றர் சிடில் உள்ளனர். சுழலுக்கு நேதன் லயன் நம்பிக்கை கொடுப்பார் என நம்பப்படுகிறது.

**இது வரலாறு**

ஆஷஸ் தொடரின் வரலாறு சுவாரஷ்யமானது. 1882ல் லண்டன், ஓவல் டெஸ்டில் அசத்திய அவுஸ்திரேலிய அணி, இங்கிலாந்து மண்ணில் முதல் வெற்றியை பதிவு செய்தது. இதுகுறித்து 'லண்டன் ஸ்போர்ட்டிங் ரைம்ஸ்' பத்திரிகை கேலியாக வெளியிட்ட செய்தியில்,'1882, ஆக., 29ல் இங்கிலாந்து அணி மரணம் அடைந்து விட்டது. இதன் உடல் எரிக்கப்பட்டு, சாம்பல் ('ஆஷஸ்') அவுஸ்திரேலியா எடுத்துச் செல்லப்படுகிறது,' என, அஞ்சலி செய்தி போல வெளியிட்டது.

பின், 1882-83ல் அவுஸ்திரேலியா சென்ற இங்கிலாந்து அணி தொடரை 2-1 என வென்று பதிலடி கொடுத்தது. இத்தொடரின் மூன்றாவது டெஸ்டில் பயன்படுத்திய 'பெயில்ஸ்களை', சில பெண்கள் எரித்து, அதன் சாம்பலை ('ஆஷஸ்') 6 அங்குல நீளமுள்ள மண்ணால் ஆன, கலசத்தில் போட்டு இங்கிலாந்து அணித் தலைவர் பிளிக்கிடம் வழங்கினர். அன்று முதல் இரு அணிகள் மோதும் டெஸ்ட் தொடருக்கு 'ஆஷஸ்' என பெயர் வந்தது.

பழமையான ஆஷஸ் கிண்ணம், லண்டனில் உள்ள மெரில்போரன் கிரிக்கெட் கழக அருங்காட்சியகத்தில் உள்ளது. இதன் மாதிரியை தான் வீரர்கள் கையில் வைத்திருப்பர். 1998-99 முதல் வெற்றி பெறும் அணிக்கு 'கிரிஸ்டலில்' செய்யப்பட்ட ஆஷஸ் மாதிரி கிண்ணம் வழங்கப் படுகிறது.

**'ஜெர்சியில்' நம்பர்**

டெஸ்ட் அரங்கில் முதன் முறையாக இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணி வீரர்கள் தங்களது பெயர் மற்றும் எண் பொறித்த ஜெர்சியுடன் இன்று களமிறங்குகின்றனர். இது பார்வையாளர்கள் வீரர்களை எளிதில் அடையாளம் காண உதவும்.

**24 புள்ளி**

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் ஒரு தொடருக்கு 120 புள்ளிகள் தரப்படும். ஆஷஸ் தொடரில் 5 டெஸ்ட் நடக்கும். இதனால் ஒரு டெஸ்டில் வென்றால் 24 புள்ளிகள் கிடைக்கும். 'சமன்' ஆனால் இரு அணிக்கும் தலா 8 புள்ளி தரப்படும். 'சமன்' எனில் தலா 12 புள்ளிகள் பெறலாம்.

# கிண்ணம் வென்றது இலங்கை




மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் அசத்திய இலங்கை அணி, 122 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் தொடரை 3-0 என முழுமையாக கைப்பற்றி கிண்ணம் வென்றது. பங்களாதேஷ் அணி 'ஹட்ரிக்' தோல்வியடைந்தது.

இலங்கை, பங்களாதேஷ் அணிகள் மோதிய 3வது ஒருநாள் போட்டி கொழும்பில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் 'துடுப்பாட்டம்' செய்த இலங்கை அணிக்கு அவிஷ்கா பெர்ணான்டோ (6) ஏமாற்றினார். அணித் தலைவர் திமுத் கருணாரத்ன (46), குசல் பெரேரா (42) நம்பிக்கை அளித்தனர்.

**மத்யூஸ் அரைச்சதம்**

பொறுப்பாக ஆடிய குசல் மெண்டிஸ் (54) அரைசதம் கடந்தார். ஷபியுல் இஸ்லாம் பந்தில் தசன் ஷனகா (30), ஷெஹன் ஜெய்சூர்ய (13) அவுட்டாகினர். அபாரமாக ஆடிய மத்யூஸ் (87) தன்பங்கிற்கு அரைச்சதம் கடந்தார்.

50 ஓவர்களில் இலங்கை அணி, 8 விக்கெட்டுக்களை இழந்து 294 ஓட்டங்களை எடுத்தது. ஹசரங்க டி சில்வா (12) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் ஷபியுல் இஸ்லாம், சவுமியா சர்கார் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

**சவுமியா ஆறுதல்**

சவாலான இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு கசன் ராஜித தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' அணித் தலைவர் தமிம் இக்பால் (2), அனாமுல் ஹக் (14) வெளியேறினர். தசன் ஷனகா பந்தில் முஷ்பிகுர் ரஹிம் (10), மொஹமட் மிதுன் (4), மகமதுல்லா (9) ஆட்டமிழந்தனர். பொறுப்பாக ஆடிய சவுமியா சர்கார் அரைச்சதம் கடந்தார். லகிரு குமரா பந்தில் சபிர் ரஹ்மான் (7), மெஹிடி ஹசன் மிராஸ் (8) ஆட்டமிழந்தனர். அகில தனஞ்செய 'சுழலில்' சவுமியா (69) சிக்கினார். ஷபியுல் இஸ்லாம் (1) ஏமாற்றினார்.

பங்களாதேஷ் அணியால் 36 ஓவர்கள் வரையே தாக்குப் பிடிக்க முடிந்து 172 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் சார்பில் அதிகபட்சமாக தைஜுல் இஸ்லாம் (39) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் தசன் ஷானக 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.



இப்போட்டியுடன் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து உத்தியோகபூர்வமாக விடைபெற்ற குலசேகரவை இலங்கை வீரர்கள் கௌரவப்படுத்திய தருணம்

கண்ணீர் அஞ்சலி

எமது சக நன்னடத்தை அதிகாரியான
திருமதி **செ.ஜெனிஸ்பிரியா பீரிஸ்**
(நானாட்டான் - மன்னார்) அவர்களின் பாசமிகு தந்தையாரான

அமரர் சந்தியா
லதிஸ்லாஸ் பீரிஸ்

தோற்றம்: 1950.01.12 | மறைவு:2019.07.31

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
**நன்னடத்தை அதிகாரிகள் சங்கம்,**
**வடக்கு மாகாணம்**



(C-7164)

### அரச அதிபர் வெற்றிக் கிண்ணம் – 2019

## யாழ் - நல்லூர் பிரதேச செயலக அணிகள் இன்று களம் காண்கின்றன

(யாழ்ப்பாணம்)

அரச அதிபர் வெற்றிக் கிண்ணம் - 2019 இறுதிப் போட்டி இன்று வியாழக் கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளைக் கொண்ட அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான துடுப்பாட்டத்தில் இன்றைய இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியும் நல்லூர் பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன.

ஏற்கெனவே நடைபெற்ற ஆட்டங்களில் முதலாவது அரையிறுதியில் யாழ்.மாவட்ட செயலகத்தை யாழ்ப்பாண பிரதேச செயலக அணி வீழ்த்தியிருந்தது.

இதேபோல 2ஆவது அரையிறுதியில் நல்லூர் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதின. இதில் நல்லூர் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றிருந்தது.

இந்நிலையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதா னத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியும் நல்லூர் பிரதேச செயலக அணியும் களம் காண்கின்றன. (ம-3)

## ஊழல் மோசடியில் ஈடுபடாத

# சர்வதேசத்திடமிருந்து நாட்டைப் பாதுகாப்பவராக ஜனாதிபதி வேட்பாளர் இருக்க வேண்டும்

## சு.கவின் பொதுச் செயலாளர் தயாசிறி விருப்பம்

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொது வேட்பாளர் இல்லாமல் தேசிய வேட்பாளர் ஒருவரே களமிறக்கப்பட வேண்டும்.

அவர் அரச நிதியில் ஊழல் மோடியில் ஈடுபடாதவராகவும், தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்காதவராகவும், சர்வதேசத்திடமிருந்து நாட்டைப் பாதுகாப்பவராகவும் இருக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர எம்.பி. தெரிவித்தார்.

சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும் உத்தேச ஜனாதிபதித் தேர்தலில் தேசிய வேட்புாளர் ஒருவர் களமிறக்கப்பட வேண்டும் என்பதே சுதந்திர கட்சியின் நிலைப்பாடாகும்.

ஆனால் பொதுஜன பெரமுனவில் சிலர் இதனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அடுத்த பொதுத் தேர்தலில் எவ்வாறேனும் பாராளுமன்றத்திற்கு தெரிவாகிவிட வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்களே இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

டிலான் பெரேரா போன்றோரே இவ்வாறு செயற்படுகிறார்கள். அவர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினராக இருக்கின்ற போதிலும் பொதுஜன பெரமுன சார்பிலேயே செயற்படுகின்றார்.

சுதந்திர கட்சி உறுப்பினராக இருக்க விரும்பினால் அவர் எம்முடன் ஒன்றிணைந்து பயணிக்கலாம். அல்லது கட்சியிலிருந்து விலகி பொதுஜன பெரமுனவில் இணைந்து கொள்ளலாம்.

மாறாக கட்சியில் இருந்து கொண்டு அதற்கு எதிராக செயற்பட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியேற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர்.சின்னையா மகாலிங்கம்

மலர்வு 10.01.1951 உதிர்வு 29.07.2019



இளைப்பாறிய நில அளவையாளரும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்க உறுப்பினரும் பதிவு பெற்ற நில அளவையாளரும் **சின்னையா மகாலிங்கம்** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(9759)

உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம் (வடபகுதி)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## ஆண்டுகள் பன்னிரண்டு உன் நினைவுகளுடன்

### சகாதேவன் நீலக்ஷன்

1985.11.08 - 2007.08.01



அன்பு மகனே! அறிவுச்சுடரே!
அஞ்சாமை உருக்கொண்ட செல்வமே!
எம் ஈரம் காயுமுன்னே ஈராறு வருடங்கள்
இன்றுடன் முடிந்ததையா!
எங்கிருந்தோ வந்த யமன் – எம் பொக்கிஷத்தை
ஓர் நொடியில் பொசுக்கி விட்டான்
ஊழி உள்ளவரை உன் நினைவே எம்மனதில்
நின் ஆத்மா சாந்தி பெற
இறையருள் வேண்டுகிறோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அம்மா, டடா, அண்ணா, அண்ணி, குட்டிநிலா

(9763)

250 (47), புகையிரத நிலைய வீதி, கொக்குவில் 2019.08.01

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தொழில்நுட்ப பீடம்
## அறிவியல் நகர், கிளிநொச்சி

### இரண்டாம் வருட 2016/17 மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட இரண்டாம் வருட 2016/2017 கல்வியாண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 05.08.2019 திங்கட்கிழமை மீளவும் ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்

(C-7158)


## இராசி பலன்

**மேடம்:** சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, தொழிலில் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம்.

**கடகம்:** உங்களைப் பற்றி விமர்சிக்கும் சிலரிடம் எதிர்த்துப் பேசாமல் இருப்பது நல்லது, கற்பனை மிகுதியான நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**சிம்மம்:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், விருந்தினர் வருகையுண்டு, சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கன்னி:** எதிர்பாராத வகையில் சில நன்மைகள் ஏற்படலாம், குடும்பத்தில் கலகலப்பன சூழ்நிலை உருவாகும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**தனுசு:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், பயணங்களின் போது கவனம் தேவை, விரயங்கள் கூடும்.

**மகரம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், நண்பர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** தொழிலில் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கடன்சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், எதிரிகள் விலகுவர்.

**மீனம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியம் இன்று கைகூடும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

கிரகநிலை: ராகு, புத | சூரி, சுக், செவ், சந் | சனி, கேது | குரு

சந்திராஷ்டமம்: உத்தராடம், திருவோணம்

01.08.2019
ஆடி 16, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
அமாவாசை முற்பகல் 9.19 மணிவரை
பூசம் பிற்பகல் 1.35 மணிவரை
சுபநேரம் 7.33 - 9.03 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை
அமிர்தசித்தம்

வளவன்



யாழ்.மாநகர சபையின் பிள்ளைக் கனியமுதம் முன்பள்ளியின் விளையாட்டு விழா நேற்று முன்தினம் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், சிறப்பு விருந்தினராக யாழ்.வலய ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வரணி மத்திய கல்லூரி மைதானம் ஒரு மில்லியன் ரூபாவில் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வரணி மத்திய கல்லூரியின் மைதான புனரமைப்புக்காக துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இவ்வேலைத் திட்டத்திற்காக பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன் 5 இலட்சம் ரூபாவும் எம்.ஏ.சுமந்திரன் 5 இலட்சம் ரூபாவும் ஒதுக்கினர்.

மொத்தமாக ஒரு மில்லியனுக்கு மைதானத்திற்கான மதில் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-114)

# கசிப்புடன் ஒருவர் கைது

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ஒருவர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கொடிகாமம் தவசிகுளம் பகுதியில் இடம்பெற்றது.

கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அதிரடியாக அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் மீசாலை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த குறித்த நபரை கைது செய்ததுடன் அவரிடம் இருந்த அரைப் போத்தல் கசிப்பையும் கைப்பற்றினர்.

மேலும் இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் "உயர்த்தும் கரங்கள்" செயற்றிட்டத்தில், இளவாலை கிராமத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 20 பேருக்கு காலணிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

(படம்:-இளவாலை செய்தியாளர்)

## தென்மராட்சியில்

# சாவகச்சேரி வைத்தியசாலையில் மாத்திரமே இரத்த மாதிரிகள் பரிசோதனை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்திற்கான இரத்தப் பரிசோதனைகள் அனைத்தும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்று வருவதாக வைத்தியசாலையின் அத்தியட்சகர் வைத்தியர் டயாழினி மகேந்திரன் தெரிவித்தார்.

தென்மராட்சியிலுள்ள கொடிகாமம் மற்றும் வரணிப் பிரதேச வைத்தியசாலைகளில் உரிய ஆய்வுகூட வசதியின்மை காரணமாக இரத்தப் பரிசோதனைகள் அனைத்தும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்று வருவதாகச் சுட்டிக்காட்டினார்.

அந்த அடிப்படையில் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையினர் நோயாளர்களின் இரத்த மாதிரிகளைப் பெற்று இரத்தப் பரிசோதனைக்காக அதனை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைப்பதாகவும் வரணி பிரதேச வைத்தியசாலை நிர்வாகத்தினர் செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் நோயாளர்களை இரத்தப் பரிசோதனை மேற்கொள்வதற்காக அனுப்பி வைப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-30)




# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சுதுமலை தெற்கு எச்சாட்டி வைரவர் ஆலய அலங்கார உற்சவத்தில் இன்று வியாழக்கிழமை 8 ஆம் திருவிழாவில் சிறப்பு சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

இச்சமயச் சொற்பொழிவை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் மற்றும் கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்குவார். (5)

# காலாவதியான பொருட்கள் விற்பனை 30 ஆயிரம் ரூபாய் அபராதம்

(கரணவாய்)

காலாவதியான பொருட்களை விற்பனை செய்த இரண்டு வர்த்தகர்களுக்கு பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி. நளினி சுபாகரன் தலா 15ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தார்.

கடந்த திங்கட்கிழமை நெல்லியடி நகரில் கரவெட்டி சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது இரண்டு வர்த்தகர்கள் காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமைக்காக பருத்தித்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதில் இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 15ஆயிரம் ரூபாவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (5-60)

# சமாதான நீதவான்களாக சத்தியப்பிரமாணம்



பொலிஸ் உத்தியோகத்தர் சரலோகநாதன் சயந்தன் நேற்று யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இணுவிலைச் சேர்ந்த இவர் சிறந்த சமூக சேவையாளராவார். (5)

◆◆◆◆◆◆◆



(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் கல்லூரி உப அதிபர் தேசமானிய மயன் ஜெயச்சந்திர மூர்த்தி றஜீவன் அண்மையில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் யாழ்ப்பாணம் ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் அதிபரும் ஆவார். (5)

# அழகுக்கலைக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யோகி அழகுக்கலை நிலையத்தின் ஏற்பாட்டில் கேக் அலங்காரக் கண்காட்சி இன்று முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் இல.75 அம்மன் வீதியிலுள்ள அழகுக்கலை நிலையத்தில் ஆரம்பமாகி 4 நாட்கள் நடைபெறும்.

இக் காட்சியில் பிரதம விருந்தினராகக் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொண்டு ஆரம்பித்து வைப்பார்.

யாழ்.பெற்றா எசன்ஸ் அனுசரணையுடன் இடம்பெறும் இக்கண்காட்சி இன்று முற்பகல் 11 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையும் மற்றும் 2,3,4 ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணி முதல் இரவு 8 மணி வரையும் இடம்பெறும். (5)

# ஆடிப்பூர ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு, மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தின் 7 ஆவது ஆடிப்பூர விழாவில் கஞ்சிக்கலய ஊர்வலமும் பால் அபிஷேகமும் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் ஊர்வலமானது திருநெல்வேலி அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய முன்றலில் ஆரம்பமாகி கல்வியங்காடு ஜீ.பி.எஸ்.வீதி இல.156 எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதி பராசக்தி வார வழிபாட்டு மன்றத்தில் நிறைவடையும். (5)

# 31 குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கிய ஸ்மார்ட் போல் வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நவீன ஸ்மார்ட் போல் திட்டத்தை நிறுத்துமாறு கோரிய வழக்கில் நான்காவது எதிராளியான ஈடொட்கோ நிறுவனத்திற்கு உரிய கட்டளை கிடைக்கப் பெறாததால் வழக்கை இம் மாதம் 28 ஆம் திகதிக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் நேற்று ஒத்தி வைத்தார்.

யாழ்.மாநகர சபையால் தனது ஆட்புல எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 5 ஜி திட்டத்தை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த ஏதுவான கட்டமைப்புக்களுடன் உருவாகும் குறித்த கோபுரங்கள் உரிய அனுமதிகள் பெறப்படாமல் கட்டப்பட்டதாகத் தெரிவித்து பொது மகன் ஒருவரால் யாழ்.மாநகர சபைக்கு எதிராகக் குறித்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இவ் வழக்கின் பிரதிவாதிகளாக யாழ்.மாநகரசபை முதல்வர், ஆணையாளர் ஆகியோருடன் ஈடொட்கோ நிறுவனமும் பெயரிடப்பட்டது.

இவ்வழக்குமீதான விசாரணை நேற்றைய தினம் காலை யாழ்.மேல் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிராளிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வழக்கு தொடர்பான கட்டளை நான்காவது எதிராளிக்கு கிடைக்கவில்லை எனத் தெரிவித்து வழக்கை பிறிதொரு திகதியில் அழைக்குமாறு மன்றில் வாதத்தை முன்வைத்தார்.

இதனை ஏற்ற மன்று வழக்குத் தொடர்பான உரிய கட்டளையை எதிராளிக்கு துரித தபாலில் அனுப்புமாறு கட்டளை இட்டதோடு வழக்கை இம் மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இவ் வழக்கின் மனுதாரர் சார்பில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆஜராகியிருந்தார். (5-10)

# செயற்பட்டு மகிழ்வோம்


(கொடிகாமம்)

நாவற்குழி குடும்ப முன்பள்ளிகளின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு காந்தி சனசமூக முன்றலில் நாவற்குழி குடும்ப முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி. சயந்தா விஜயகுமார் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் செ.பிரதாப், சீபன் பாஸ்கர் வேணர்ஸ் இயக்குநர் கு.டீபன், தென்மராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.எஸ்.அரியநாயகம், தென்மராட்சி வலய முன்பள்ளிகளின் இணைப்பாளர் செல்வி.ர.தர்மிலா, கௌரவ விருந்தினர்களாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் கோ.ஜீவபாலன் ஆகியோர் கலந்து கொள்வர். (5-114)

# வீடு தீப்பிடித்ததில் உடைமைகள் நாசம்

(கரணவாய்)



வீடு ஒன்று தீப் பிடித்து எரிந்ததில் அங்கிருந்த உடைமைகள் நாசமாகியதுடன் வீடும் முற்றாக சேதமடைந்தது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் உடுப்பிட்டி சந்தணத்தரை பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாக்கியசிங்கம் குமுதினி என்பவரது வீடே தீயில் எரிந்து நாசமாகியது.

வீட்டில் இருந்தோர் வெளியில் சென்றிருந்த சமயம் தீப்பிடித்ததாக கூறப்படுகிறது.

அயலவர்களும், தீயணைப்புப் படையினரும், சேர்ந்து போராட்டத்தின் பின்னர் தீயினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தீப்பிடித்ததற்கான காரணம் உடனடியாக தெரியவரவில்லை. (5-60)

# அரச வங்கிகளை தனியார் மயப்படுத்த ஒருபோதும் இடமளியேன் - ஜனாதிபதி

(கொழும்பு)



அரச வங்கிகளை மேலும் பலப்படுத்த வேண்டுமே ஒழிய அவற்றை ஒருபோதும் தனியார் மயப்படுத்தக்கூடாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அன்று போலவே இன்றும் அதுவே தனது அரசியல் கொள் காணப்படுகின்றது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் 80 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் விழாவில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி நிறுவனங்களிலுள்ள ஊழல்கள், திறமையற்ற முகாமைத்துவம் மற்றும் தொழிற்சங்கங்களின் போக்கு ஆகியவை காரணமாக அரசாங்கத்திற்கு வருமானத்தை தேடித் தரும் நிறுவுனங்களில் ஏற்பட்டுள்ள நிலைமை அனைவரும் அறிந்ததே.

அத்தகைய நிறுவனங்களுக்கு தற்போது சக்தியாக விளங்குவது அரச வங்கிகளே என்பதை சுட் டிக் காட்டிய ஜனாதிபதி நாட்டின் தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக 80 வருடங்களாக இலங்கை வங்கி நிறைவேற்றிய செயற் பணிகளை பாராட்டினார்.

இலங்கை வங்கியின் 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நினைவு முத்திரையொன்றும் முதல் நாள் தபாலுறையும் வெளியிடப்பட்டதுடன், ஜனாதிபதிக்கு விசேட நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய உள்ளிட்ட விருந்தினர்களும் இலங்கை வங்கியின் தலைவர் ரொனடில் சீ.பெரேரா, பிரதம நிறைவேற்று அதிகாரி செனரத் பண்டார உள்ளிட்டவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# ஆட்டோ விபத்து; அறுவர் காயம்

(பதுளை)

பதுளை- மகியங்கனை பிரதான வீதியின் தல்தென 12ஆம் மைல் கல் பிரதேசத்தில் இடம் பெற்ற விபத்தில் 6 பேர் காயமடைந்து, பதுளை, மீகஹகிவுல வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனரென, பதுளை பொலிஸார் தெரிவித்தனர். நேற்று அதிகாலை, குறித்த வீதியில் பயணித்த ஆட்டோ 8 அடி ஆழமான பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளான போதே, அதில் பயணித்த 6 பேர் காயமடைந்தனர். (இ-7)

# இணுவில் இந்துவில் முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இணுவில் இந்துக் கல்லூரியின் முத்தமிழ் விழா இன்று முதலாம் திகதி வியாழக்கிழமை காலை நிகழ்வு 8.30 மணி முதல் நண்பகல் 12 மணிவரை கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் தி.தேவதயாளன் (காப்பாளர்) முன்னிலையில் ஆசிரியர் தி.சசீதரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொள்வார். மாலை நிகழ்வு பிற்பகல் 3.30 மணி முதல் 9 மணிவரை கல்லூரி மைதான திறந்த வெளி அரங்கில் ஆசிரியர் திருமதி பிரதீபன் கவியரசி தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்வார். (5)


உங்கள் வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

தொலைபேசி 222 3378, 021 221 7603

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

20 ஆண்டு நிறைவை நோக்கிப் பயணிக்கிறது...

உங்கள் ஆசியும் அரவணைப்பும் இலட்சக்கனக்கான வாசகர் சேனையுடன் 20.12.2019 இல் 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது. இருபது ஆண்டு காலப் பயணத்தில் நடுவுநிலையுடன் அதிக வாசகர்களைக் கொண்ட, விற்பனையில் முன்னணி என்ற பெருமைகொண்ட ஒரே நாளிதழாக வலம்புரி வியாபகம் பெற்றுள்ளது.

விற்பனையில் சாதனை படைத்திருக்கும் வலம்புரியின்
விற்பனைக் கணக்கெடுப்பை வலம்புரி விற்பனை முகவர்களிடம்
கேட்டறிந்து கணக்கெடுங்கள். அப்போது உண்மை புரியும்.

இருபது ஆண்டு நிறைவில் உங்கள் வலம்புரி விசேட சலுகைக் கட்டணத்தில்

01.08.2019 தொடக்கம்

விளம்பரங்களை வெளியிடத்
தீர்மானித்துள்ளது. தமிழர் தாயகம்
எங்கும் வியாபித்துள்ள உங்கள் வலம்புரி
20 ஆண்டு நிறைவில் இன்னும்
புதுப்பொலிவுடன் உங்களைச் சந்திக்கும்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




**Pratheepan Kumaragurunathan**
Yesterday at 1:06 PM

நாமல் ராஜபக்ஷவின் நிகழ்ச்சி திட்டம் குறித்த விளம்பரத்தை காணக்கிடைத்தது. சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே. #அவர்கள் மாறவில்லை #

**சிவரதன் வயிரவநாதன்**
July 28 at 8:03 AM

தமிழ் மக்கள் பேரவைக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி களமுனையை திறந்துள்ளது.
அவர்கள் இன்னும் துரோகிகள் என்று சொல்லாதது தங்களை மட்டும் தான்

**Latha Kanthaija**
Yesterday at 1:22 PM

காணாமல் போன
பிள்ளைகளின்
தாய்மார்களை/ உறவுகளை
தெருத்தெருவாக கண்ணீர்
சிந்த வைத்து இறப்பு வரை
தெருவிலேயே இருக்க
வைத்த கொடுமைக்கு
யார் யார் காரணம்?
யார் யாருக்கு
அவர்களின் கண்ணீரால்
இலாபமும் வளமான வாழ்வும்?

**செந்தூரர் தமிழ்** is with Tnpf London and 4 others.
July 28 at 5:50 PM

நேற்று கஜன் அண்ணா
#தமிழ் மக்கள் பேரவையை நாமே
உருவாக்கினோம்
பின்பு #தமிழ் மக்கள் பேரவையில் இருந்து
வெளியேறி விட்டோம்
இன்று
#தமிழ் மக்கள் பேரவை விக்னேஸ்வரனின்
கைப்பொம்மையாக செயறபடுகின்றது.
நாளை துரோகி ... அதுதானே



**Shankeerthanan Kugathasan** is with Stanislaus Celestine and 9 others.
July 26 at 6:54 AM

72 நிமிடங்கள் எழுந்து நின்று பேசி என்ன பயன் ஐயா

5 நிமிடங்கள் உட்கார்ந்து வீடு தேடி வந்தவர்களிடம் அன்பாக பேசாமல் பத்திரிகை படித்தபடி அவர்கள் முகத்தை கூட பார்க்காமல் கைதிகளை விடுவிக்கும் திறப்பு என்னிடம் இல்லை என்று எகத்தாளமா பேசினீர்களே (எதிரியா இருந்தாலும் வீடு தேடி வந்தவரை வரவேற்பது தமிழர் பண்பாடு)

ரணிலை.காப்பாற்றும் போது நாங்கள் எழுத்து மூலம் உறுதி மொழிகள் எடுத்துவிட்டோம் என்றீர்கள் அவர்களோ அப்படி எதுவும் கொடுக்கவில்லை என்று அறிக்கை விட்ட போது 2 நிமிடத்தில் இனத்தை விற்றுவிட்டீர்களே ஐயா

பயங்கரவாதத்தை ஒழித்தால் நான் இன்று இருந்து கொண்டு திருகோணமலை பயணம் செய்து கொண்டு இருக்கிறேன் என்று இருந்து கொண்டு அறிக்கை விட்டீர்களே

கூட்டமைப்பை விடுதலைப்புலிகள் தான் உருவாக்கினதாக எனக்கு தெரியாது என்று ஒரு நிமிடத்தில் அடித்து மாற்றினீர்களே ஐயா

எல்லாவற்றையும் மறந்து. தேசிய தலைவர் மன்னர் என்று ஒரு நிமிடத்தில் இருந்து கொண்டு அறிக்கை விட்டீர்களே
இவ்வாறு பல இருந்து கொண்டு செய்ய வேண்டிய பல பலமான காரியங்களை செய்யாமல் விட்டபிறகு
72 நிமிடங்கள் நின்று பேசி என்ன பயன்

**அன்பு வாசகர்களே! சுட்டும் முகநூல் என்ற புதியதொரு களம் உங்கள் கருத்துக்களைத் தாங்கி இன்று முதல் (01.08.2019) வெளிவருகிறது. முகநூல்களில் நீங்கள் இரசித்து பார்த்த அல்லது உங்கள் முகநூல் பக்கத்தில் நீங்கள் முன்வைத்த ஆழமான-யதார்த்தமான கருத்துக்கள் இவ்விடத்தில் பதிவிடப்படும். இதற்கு உதவியாக முகநூலில் வெளிவரும் அறிவார்ந்த கருத்துக்களை www.facebook.com/valampurii எனும் தளத்தில் உள்பெட்டி (Messenger) ஊடாக அனுப்பி வைக்கலாம்.**

# மிலேனியம் சவால் நிதிய உடன்பாட்டிற்கு ஜனாதிபதி மைத்திரி காலஅவகாசம் கோரல்



## அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கவில்லை

(கொழும்பு)

மிலேனியம் சவால் நிதிய உடன்பாடு தொடர்பாக ஆராய்வதற்கு காலஅவகாசம் தேவைப்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தமையினால் குறித்த உடன்பாட்டுக்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் குறித்த விவகாரம் தொடர்பில் கலந்துரையாடப்பட்ட போதே ஜனாதிபதியால் இவ்வாறு கால அவகாசம் கோரப்பட்டது.

அத்தோடு இது குறித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இன்று கலந்துரையாடவுள்ளதாகவும் இதன்பின்னர் தனது முடிவை அறிவிப்பதாகவும் ஜனாதிபதி அமைச்சரவையில் தெரிவித்தார்.

மிலேனியம் சவால் நிதிய உடன்பாடு தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் அமைச்சரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

இதனைச் சமர்ப்பித்து கருத்து தெரிவித்த நிதி அமைச்சர், மிலேனியம் சவால் நிதிய உடன்பாடு ஒரு வளர்ச்சி உதவி ஒப்பந்தம் என்றும் அமெரிக்கா வழங்கிய 480 மில்லியன் அமெரிக்க டொலர், ஒரு பரிசுத்தொகை என்றும் அது கடன்தொகை இல்லை எனவும் தெளிவுபடுத்தினார்.

அத்தோடு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்திப் பணிகளை தொடர்வதற்கு இந்தத் தொகை முக்கியமானது என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

இதேவேளை இந்த உடன்பாட்டின் சில உட்பிரிவுகள் தொடர்பாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் கவலைகளைத் தொடர்ந்து, மைத்திரிபால சிறிசேன இந்த உடன்பாட்டுக்கு அனுமதியளிக்க மறுத்திருந்த நிலையில் உடன்பாட்டுக்கு ஒப்புதலை அளிக்கும் விடயத்தில் சாதகமாக பரிசீலிக்குமாறு அமெரிக்க தூதுவர் அலைனா கடந்த வாரம் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இந்த உடன்பாடு வெளிப்படையானது என்றும், இலங்கை மக்களுக்கு செழிப்பை ஏற்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டது என்பதையும் அவர் அந்தக் கடிதத்தில் உறுதிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எனக்கு நன்றி தெரிவித்தமைக்காக மலிங்க மீது சேறுபூசுகின்றனர்





(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளராக இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற லசித் மலிங்க எனக்கு நன்றி தெரிவித்தமைக்காக அவர் மீது சேறு பூசுகின்றனர் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் அரசியல் ரீதியில் மற்றவர்கள் மீது சேற்றை வாரியிறைப்பது அதிகமாக காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

### மகிந்த கவலை

சேற்றை வாரியிறைப்பதன் மூலம் இந்த அரசாங்கம் ஆட்சியை கைப்பற்றியது. இன்றும் அதனைத் தொடர்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

11 வருடங்களுக்கு முன்னர் மலிங்கவின் காலில் காயம் ஏற்பட்டபோது நான் உதவினேன் என தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ அது அவருக்கு மிக முக்கியமானதாக விளங்கியது எனவும் தெரிவித்தார்.

இந் நிலையில் அண்மையில் மலிங்க ஆற்றிய பிரியாவிடை உரைக்காக அவர்மீது சிலர் சேற்றை வாரி வீசுகின்றனர் என மகிந்த கவலை வெளியிட்டார். (இ-7)

# பொம்மைக்குள் போதை மாத்திரைகள்

## இளைஞன் கைது



**(கொழும்பு) போர்த்துக்கல் நாட்டிலிருந்து கொழும்பு மத்திய தபால் பரிமாற்ற நிலையத்திற்கு வந்த பொம்மைகள் அடங்கிய பொதி ஒன்றிலிருந்து 3050 போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப் பட்டன.**

இந்நிலையில் கொழும்பு 14, லெயார்ட் பிராட்வேயில் வசிக்கும் 27 வயது இளைஞன் ஒருவர் போர்த்துக்கல்லிலிருந்து அனுப் பப்பட்ட குறித்த பொம்மைகள் அடங்கிய பெட்டியை பெற்றுக் கொள்வதற்காக இரவு 7.30 மணிக்கு கொழும்பிலுள்ள மத் திய அஞ்சல் பரிமாற்றத்திற்கு சென்றுள்ளார்.

இதன்போது சந்தேகத்தின் பேரில் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டதாக சுங்க அதி காரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலதிக விசா ரணைகளை சுங்கத்துறை அதி காரிகள் மேற்கொண்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கசிப்பு வைத்திருந்த நபரை பொலிஸார் கைது செய்தனர்

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரி விற்குட்பட்ட பகுதியில் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளார். இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கொடிகாமம் கெற்பேலிப் பகுதி யில் இடம்பெற்றுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலையடுத்து கெற் பேலிப் பகுதியைச்சேர்ந்த நபர் ஒருவரை கைது செய்துள்ளது டன் அவரிடம் இருந்து கால் போத்தல் கசிப்பையும் கைப் பற்றியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (5-114)

# போதைப்பொருள் வியாபாரிக்கு மரண தண்டனை விதிப்பு!

(கொழும்பு)

321 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை வைத்தி ருந்த மற்றும் வியாபாரத்தில் ஈடுபட்ட சம்பவத்தில் குற்றவா ளியாக இனங்காணப்பட்ட நப ருக்கு கொழும்பு மேல் நீதிமன் றம் மரண தண்டனை விதித்தது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விகும் களுஆராச்சி, நேற்று முன்தினம் இந்த உத் தரவை பிறப்பித்தார்.

மாளிகாவத்தை பிரதேசத் தைச் சேர்ந்த குறித்த நபர், 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி கைது செய் யப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (இ-7

# ரத்ன தேரர் முறைப்பாடு விசாரணை முன்னெடுப்பு



(கொழும்பு)

மட்டக்களப்பு தனியார் பல் கலைக்கழகம் தொடர்பில், கிழ க்கு மாகாண முன்னாள் ஆளு நர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா வுக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர், மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட் டிற்கமைய குற்ற விசாரணைத் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ், நிதிக் குற்றவியல் விசார ணைப் பிரிவினர் விசாரணை களை முன்னெடுத்து வருகின் றனரென, பொலிஸ் ஊடகப் பேச் சாளர் ருவான் குணசேகர தெரி வித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார். (இ-7)

# நாடாளுமன்றில் மிளகாய்த்தூள் வீசிய சம்பவம் குறித்த விசாரணைகள் முடிவு

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வின் போது மிளகாய்த் தூள் வீசி எறிந்து அநாகரிகமாக நடந்து கொண்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முடிவுறுத்தப்பட உள்ளதாகத் தெரிய வருகி றது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தும் பொறுப்பு அமைச்சர் திலக் மாரப்பன தலைமையிலான குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர மிளகாய்த்தூள் கரைத்து வீசும் காட்சிகள் உலகம் முழுவதிலும் ஒளிபரப்புச் செய்யப்பட்டிருந்த நிலையில், விசாரணைகளை முடிவுறுத்த தீர்மானிக்கப்பட் டது. (இ-7)

# குறை'களை' பதிகம் 75

## பாடசாலை பாடவிதானத்தில் நீச்சல் கலை இணைந்திடுமா?



பாடசாலை முடிந்து
வீடு வரும் வழியில்
நிறைந்து வழிந்தோடும்
குளத்தில் குதித்து
நீந்தி விளையாடி
ஓடிப்பிடித்து
ஒருவரையொருவர் தள்ளி விழ்த்தி
ஒருவனை அமிழ்க்க- அவன்
மூச்சுமுட்டும் வரை தம்மடித்து
முடியாதென்றபோது குமிழிவிட
மேலே இழுத்து முதுகில் அடித்து
சொர்க்கம் கண்ட அந்தக் காலத்தில்
நீரில் மூழ்கி யாரும் இறந்ததில்லை

ஆழிக்குமரன் ஆனந்தன்
பாக்குநீரிணையை நீந்திக்கடந்தான் என
பரீட்சைக்காய்ப் படிக்கும் நாம்
தற்காப்புக் கலையாம்
நீச்சல் கலையை எம்பிள்ளைகளுக்கு
சொல்லிக் கொடுத்திட
முன்வராதது ஏன்தானோ?

தரம் ஐந்துப் பரீட்சைக்கென
வேள்விக் கடாய்களைப் போல்
பிள்ளைகளைத் தயார்படுத்த
ஓடியோடித் திரியும் நாம்
அவர் வாழ்வை எதிர்கொள்ளும்
வழிகளை அமைத்திட
ஒரு தடவையேனும் சிந்தித்ததுண்டா?

பள்ளிச் சுற்றுலா என்றால்
பிள்ளை நீச்சலடித்து விளையாட
அங்கலாய்த்து நிற்கும்

'நீரில் கால்வைத்தால்
நடக்கிறது வேற' என
பிள்ளைகளை வெறும்
பூச்சிகளாய் வளர்க்க
ஆபத்து வந்தால் அதை அவர்
எப்படி எதிர்கொள்வர்
சிந்திப்பது யார் பொறுப்பு?

அன்பார்ந்த பெற்றோரே!
பிள்ளை நீரில் மூழ்கி
இறந்து விடுவான் என
அவனைப் பொத்தி வளர்ப்பதிலும்
நீரை எதிர்த்து அவனை
நீந்தப் பழக்குங்கள்
அவன் தன்னம்பிக்கை உயர்வடையும்

பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில்
தற்காப்புக் கலைகளில் ஒன்றான
நீச்சல் கலையும் இணைத்து
எம் எதிர்கால சந்ததியினர்
நீரில் மூழ்கி இறக்கும் நிலையை
இல்லாது ஒழித்திடுவோம்
நாம் எல்லோரும் இதை
உணர்ந்து செயற்படுவோம்

மாவை. நா.கஜேந்திரன்

அன்பு வாசகர்களே!
இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# விவசாய நிலங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதை நிறுத்துமாறு கோரிக்கை



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய நிலங்களில் ஆழ்துளைக் கிணறுகளை அமைப்பதைத் தவிர்க்குமாறு பொது அமைப்புகளினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டின் பின்னர் விவசாய நிலங்களில் ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து விவசாய முயற்சிகளை பலர் முன்னெடுத்து வருகின்றனர். இவை தொடர்பாக கமநலசேவை நிலையங்களினால் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு மானிய உரங்கள் என்பன நிறுத்தப்பட்டுள்ள போதிலும் பணபலம் கொண்ட விவசாயிகள் விவசாய நிலங்களில் ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து இரவு-பகலாக நீரினை இறைத்து பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர். இதன் காரணமாக எதிர்காலத்தில் விவசாய முயற்சிகள் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்வதுடன் நிலத்தடி நீருக்கான நெருக்கடிகளும் ஏற்படும்.

எனவே விவசாய முயற்சிகளுக்கு ஆழ்துளைக்கிணறுகளை அமைப்பதையும் பயன்படுத்துவதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு பொது அமைப்புகளினாலும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் குடிநீர்த் திட்டங்களுக்கு ஆழ்துளைக் கிணறுகளை அமைப்பதற்கும் எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் திறந்த கிணறுகளை குடிநீருக்காக அமைக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (9-350)

# மோட்டார் சைக்கிள்கள் திருடிய இருவர் வவு.பொலிஸாரால் கைது



(குருமன்காடு)

வவுனியா வைத்தியசாலைக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்ட மூன்று மோட்டார் சைக்கிள்களை திருடியதாக இருவர் வவுனியா பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா வைத்தியசாலையில் இருந்த நோயாளர்களை பார்வையிடுவதற்காக வந்தவர்கள் தமது மோட்டார் சைக்கிள்களை வைத்தியசாலை முன்பாக நிறுத்தி விட்டு சென்ற நிலையில் 3 ரிவிஎஸ் 50 ரக மோட்டார் சைக்கிள்கள் காணாமல் போயிருந்தன.

இது தொடர்பில் மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் இருவரை கைது செய்துள்ளனர்.

வவுனியா கோவில்குளம் பகுதியைச் சேர்ந்த 38 மற்றும் 32 வயதுடைய இரு நபர்களே மேற்படி கைது செய்யப்பட்டுள்ளதுடன், திருடப்பட்ட ரிவிஎஸ் 50 ரக மோட்டார் சைக்கிள்கள் மூன்றும் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(9-250)

# பெரியகட்டு அந்தோனியார் ஆலய திருவிழா

(மன்னார்)

மன்னார் மறைமாவட்டம் செட்டிகுளம் பெரியகட்டு தூய அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா திருப்பலி எதிர்வரும் ஓகஸ்ட மாதம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி பி.ல.இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

ஆலயத்தின் திருவிழா கடந்த 26 ஆம் திகதி மாலை பங்குத் தந்தை எஸ்.செபமாலை அடிகளார் தலைமையில் ஆரம்பமானது. எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 3 ஆம் திகதி வரை மாலை 5.30 மணி முதல் இரவு 8 மணி வரை இந்தியாவில் இருந்து வருகை தரும் அருட்தந்தை இக்னேசியஸ் அடிகளாரின் சிறப்பு வழிபாடுகள் மற்றும் குணமாக்கல் வழிபாடுகளும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (9-285)




# வழக்கு ஒத்திவைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திற்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் ஏழு பேருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் ஒன்றிணைந்து கடந்த வருடம் 2018.08.02 ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர். இந் நிலையில் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளுக்கு தமது கோரிக்கைகளை முன்வைக்கச் சென்றபோது. நீண்டநேரம் ஆகியும் திணைக்களத்திற்குள் இருந்த அதிகாரிகள் மக்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காது இருந்த நிலையில் அலுவலகம் சேதமாக்கப்பட்டது.

இவ்வாறு அலுவலகம் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், இதில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் 7 பேருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் ரவிகரன் மற்றும் 7 பேரும் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். அந்த வகையில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட 7 பேரும் நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்காக முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையானதைத் தொடர்ந்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதிக்கு வழக்கு தவணையிடப்பட்டுள்ளது. (9)



வருடம்தோறும் இந்துக்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆடி அமாவாசை விரதம் நேற்று அனைத்து இந்து ஆலயங்களிலும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. குறிப்பாக வவுனியா, செட்டிகுளம் பகுதியில் ஈழத்தின் பழைமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றாகிய வௌவாலை சந்திரசேகரீச்சரம் ஆலயம், வவுனியா அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயம், வவுனியா கந்தசுவாமி ஆலயங்களில் இடம்பெற்றது. மேலும் வரலாற்று சிறப்புமிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும் சிறப்பான வழிபாடுகள் இடம்பெற்றன. ஆடி அமாவாசை விரதம் மேற்கொள்ளும் பக்தர்கள் தங்களது பிதிர்களுக்கான வழிபாடுகளை மேற்கொண்டதுடன் அந்தணர்களிற்கு தானமும் வழங்கியிருந்தனர். (9-70-250-299)

# தற்காப்பு கலைக்கிராமம் இராணுவத்தால் திறந்து வைப்பு



(கிளிநொச்சி)

பத்து பலங்கொண்ட இராவண தற்காப்பு கலைக்கிராமம் கடந்த வாரம் இரணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் என்.யூ.எம்.எம்.டபிள்யூ சேனாநாயக்கவினால் கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ரவிப்பிரியவின் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர். சுந்தரம் அருமைநாயகம், இராணுவ உயரதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

தற்காப்பு கலையினை அழியவிடாது அதனை பேணி பாதுகாக்கும் நோக்குடன் கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தினால் படையினருக்கு தற்காப்பு கலை பயிற்சி முதல் கட்டமாக வழங்கப்பட்டது.

குறித்த பயிற்சியின் நிறைவாகவும் கலை பாரம்பரியத்தினை பேணிப்பாதுகாக்கும் நோக்குடனும் இரணைமடுவில் அமைந்துள்ள இராணுவ தலைமையகத்தில் குறித்த பத்து இராவண பலம் கொண்ட தற்காப்பு கலைக் கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமம் பண்டைக்கால வாழ்க்கை முறை, பயன்படுத்தப்பட்ட மருத்துவ முறை மற்றும் தற்காப்புக் கலையினை பிரதிபலிக்கும் வகையில் படையினரால் உருவாக்கப்பட்டுள்ளது. (9)

# மடுத்திருவிழாவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும்

## மன்னார் மறைமாவட்ட ஆயர் வலியுறுத்து

(மன்னார்)

மடு பெருவிழாவுக்கு பெருந்தொகையான பக்தர்கள் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதால் நாட்டின் நிலைமை இன்னும் வழமைக்கு திரும்பாத நிலையில் பக்தர்களின் நலன் கருதி பாதுகாப்பை பலப்படுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது என மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்திலுள்ள மடு அன்னையின் பெருவிழாவை முன்னிட்டு இதற்கான ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சீ.ஏ.மோகன் ராஸ் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் பாதுகாப்பு, போக்குவரத்து, சுகாதாரம், வீதி ஒழுங்குகள், மின்சாரம், குடிநீர், உணவு மற்றும் தங்குமிட வசதிகள் போன்ற அத்தியாவசிய தேவைகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டன.

இக் கூட்டத்தில் ஆயர் கருத்துத் தெரிவிக்கையில்,

மடு ஆலய பெருவிழாவை மிகச் சிறப்பாக கொண்டாடுவதற்காக அரசு, அரசு சார்பற்ற திணைக்களங்களைச் சேர்ந்தவர்களின் ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம்.

தற்பொழுது எமது நாடு இன்னும் இயல்பு நிலைக்கு திரும்பவில்லை. இதனால் மக்கள் தொடர்ந்து அச்ச நிலையிலேயே இருந்து வருகின்றனர். இருப்பினும் இம்முறை வழமை போன்று பெருந்தொகையான பக்தர்கள் வரக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

இதனால் இன்றைய சூழ்நிலையில் இங்கு பாதுகாப்பை பலப்படுத்தப்பட வேண்டிய அவசியம் இருப்பதுடன் இங்கு பெருவிழாவுக்கு வந்து செல்லும் பக்தர்களின் அத்தியாவசிய தேவைகளுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் இருக்கின்றது என மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு தொடர்பாக மடு பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த மடு விழாவை போல் அல்லாது இம்முறை ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் விஷேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படை, இராணுவமும் இணைந்த பாதுகாப்புக்குமான ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மடு ஆலய வளாகத்துக்குள் நுழையும் அனைத்து வாகனங்களும் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டதுக்கு அடையாளமாக வாகன கண்ணாடிகளில் ஸ்ரிக்கர்கள் ஒட்டுவதற்காகவும் திட்டமிட்டுள்ளோம். வாகனங்கள் ஆலய வளாகத்துக்குள் தரித்து நிற்பதற்காக ஐந்து இடங்கள் அடையாளமிடப்பட்டுள்ளன.

கூடாரம் அமைத்து தங்கும் பக்தர்களின் நலன்கருதி ஒன்பது பகுதிகளாக பிரிக்கப்பட்டு பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

வெடிகுண்டு செயலிழக்கும் மற்றும் மோப்பநாய் கொண்டு செயற்படும் பாதுகாப்பு பிரிவினரும் நாளாந்தம் மாலை ஆராதனைகளுக்கு முன்பு உற்சவம் நடக்கும் இடத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். அத்துடன் குற்றச் செயல்களைத் தடுக்க முப்படைகளின் ஒருங்கிணைந்த பாதுகாப்பும் மேற்கொள்ளப்படுமென மேலும் தெரிவித்தார். (9-285)

# சட்டவிரோத மணல் அகழ்வை தடுப்பதற்கு பொலிஸ் காவல் பிரிவுகளை அமைக்கக்கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்கின்ற மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு கண்டாவளையின் கல்லாறிலும் கரைச்சியின் வன்னேரிக்குளத்திலும் பச்சிலைப்பள்ளியின் கிளாலியிலும் பொலிஸ் காவல் பிரிவுகளை அமைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பத்தாண்டுகளாக தொடர்ச்சியாக நடைபெறுகின்ற மணல் அகழ்வு காரணமாக ஆற்றுப்படுகைகள், நெற்செய்கை நிலங்கள் பேரழிவுகளை எதிர்கொண்டுள்ளன.

இரணைமடு, அக்கராயன் குளம் உட்பட அனைத்து குளங்களின் கீழும் தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கிராமங்களில் மாவட்டச் செயலகத்தின் அனுமதி இல்லாமலே டிப்பர்கள் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றன. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கடந்த பல தடவைகள் மேற்படி இடங்களில் பொலிஸ் காவல் பிரிவுகளை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அது கைகூடவில்லை.

இந்நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் காவல் பிரிவுகளை மேற்படி இடங்களில் அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட பொலிஸ் அதிகாரி இவ் விடயத்தினை உயரதிகாரிகளிடம் தெரியப்படுத்துவதாகத் தெரிவித்தார். (9-350)






கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மிக நீண்ட காலமாக துப்புரவு செய்யாது காணப்பட்ட பற்றைகள் நோயாளர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. நோயாளர் நலன்புரி சங்கத்தின் தலைவரான முன்னாள் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேலின் ஏற்பாட்டுக்கு அமைவாக இப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(படம்:-அக்கராயன் செய்தியாளர்)

# தீ விபத்தில் உடமைகளை இழந்தவர்களுக்கு உதவி



(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் முத்துவிநாயகர் பகுதியில் சமையல் எரிவாயுக்கசிவினால் ஏற்பட்ட தீவிபத்தின்போது முற்றும் முழுதாக தமது சொத்துகளை இழந்த குடும்பத்திற்கு கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலனினால் வாழ்வாதாரத்திற்கான உதவிகளை வழங்கியுள்ளார்.

பிரதேச சபை உறுப்பினரிடம் குறித்த குடும்பத்தினர் விடுத்த கோரிக்கைக்கமைவாக லண்டனில் வசித்துவரும் சட்டத்தரணியான பரமலிங்கம் லிங்க ஜோதியிடம் இருந்து பழச்சாறு தயாரிக்கும் இயந்திரக் கொள்வனவிற்காக 60 ஆயிரம் ரூபாவை பெற்ற பிரதேச சபை உறுப்பினர் குறித்த நிதியினை பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு கடந்த 28 ஆம் திகதி வழங்கினார். (9-350)



கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் மூத்தோரை மகிழ்விக்கும் ஆன்மீகப் பயணத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் கடந்த் வாரம் வன்னிகோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் நிதி அனுசரணையில் காவேரி கலாமன்றம் ஊடாக திருகோணமலை மாவட்டத்தின் திருத்தலங்களை கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் ஊரியான் கிராம மூத்தோர் தரிசித்தார்கள்.

# வரட்சி காரணமாக கிளிநொச்சியில் 7562 குடும்பங்கள் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் தொடர் வரட்சி காரணமாக 44 கிராம அலுவலர் பிரிவுகளைச்சேர்ந்த 7562 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். தற்போதைய வரட்சி காரணமாக வட பகுதியில் கடுமையான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத் தின் வரட்சி நிலமை தொடர்பாக மாவட்ட அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி. கண்டாவளை. பூநகரி. பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் 44 கிராம அலுவலர் பிரிவுகள் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்படி கிராம அலுவலர் பிரிவில் 7562 குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்து 269 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தின் கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவில் பத்துக்கிராம அலுவலர் பிரிவுகளைச்சேர்ந்த 5471 பேருக்கும் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் ஏழு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச்சேர்ந்த 2080 பேருக்கும் பூநகரி பிரதேச செயளாளர் பிரிவில் 17 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 7983 பேருக்கும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் எட்டுக்கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 1472 பேருக்கும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த 24 ஆம் திகதி வரட்சி தொடர்பான நடவடிக்கைகளுக்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 1.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (9-315)

# அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பில் பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடினால் பிரச்சினைகளை கட்டுப்படுத்தலாம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கமநலசேவை நிலையங்கள் மேற்கொள்கின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பாக பொது அமைப்புகளுக்கு தகவல்கள் தெரியப்படுத்துவதில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே பல்வேறு குறைபாடுகள் வேலைகளுக்குப் பின் தெரியப்படுத்தப்படுகின்றன எனப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிய குளங்கள், வாய்க்கால்களை புனரமைத்தல், மானிய உரங்கள் வழுங்கல் போன்ற பல்வேறு வேலைத் திட்டங்களை கமநலசேவை நிலையங்களே முன்னெடுக்கின்றன.

வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும்போது கிராம அபிவிருத்திச் சங்கம், கமக்கார அமைப்புகளுடன் கலந்துரையாடி வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாது ஓரிருவருடன் முன்னெடுக்கப்படும் வேலைகளில் குறைபாடுகள் வரும்போது தான் பிரச்சினைகள் உருவாகின்றன. கமநலசேவை நிலையங்கள் வேலைகளை முன்னெடுக்கும்போது பொது அமைப்புகளின் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதன் மூலம் மேற்கொள்கின்ற வேலைத் திட்டங்களை சிறப்பாக மேற்கொள்ளமுடியும் எனவும் பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன. (9-350)

# பாரதம்

## ஜம்மு-காஷ்மீர் எல்லைப்பகுதியில் பாக்-இராணுவம் அத்துமீறி துப்பாக்கிச்சூடு

### இந்தியா தக்க பதிலடி

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீரின் நவ்ஷெரா செக்டாரின் எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் நேற்று அத்துமீறித் தாக்குதலில் ஈடுபட்டது. இந்திய இராணுவமும் தகுந்த பதிலடி கொடுத்தது.

காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் ஒப்பந்தத்தை மீறி அடிக்கடி அத்துமீறலில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், நேற்று பாகிஸ்தான் ராணுவம் எல்லையில் அத்துமீறித் தாக்குதலில் ஈடுபட்டது.

ரஜோரி மாவட்டத்தில் உள்ள நவ்ஷெரா செக்டர் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்று அதிகாலையில் துப்பாக்கியால் சுட்டுத் தாக்குதல் நடத்தினர்.

இந்திய இராணுவமும் இதற்கு பதிலடி கொடுத்தது. தொடர்ந்து அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. (ஐ)

## பீகாரில் கனமழை 130 பேர் உயிரிழப்பு

(பீகார்)

கனமழை காரணமாக பீகாரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 130 ஆக உயர்ந்துள்ளது.

வட மாநிலங்களில் பெய்த கனமழையால் கடந்த இரண்டு வாரங்களாக பீகார் மற்றும் அசாம் ஆகிய மாநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

இதனால் 13 நகரங்களைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர்.



அதேநேரம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணப் பொருட்களை தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் வழங்கி வருகின்றனர்.

அசாமில் பாதிக்கப்பட்ட மக்கள் சுமார் 417 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அங்கு வெள்ளம் வடிந்து வருவதால் மக்கள் தற்போது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி வருகின்றனர். (ஐ)

## பயணி ஒருவரின் பொதியில் ஏவுகணை இயக்கும் கருவி




(வோஷிங்டன்)

அமெரிக்காவிலுள்ள வோஷிங்டனில் பயணி ஒருவரின் பொருட்களை சோதனையிட்ட போது அதில் ஏவுகணையை இயக்கும் கருவி ஒன்று இருந்ததைக் கண்டறிந்த விமான நிலைய அதிகாரிகள் அதனை கைப்பற்றியுள்ளனர்.

தான் இராணுவத்தில் பணியாற்றியதாகத் தெரிவித்த அந்தப் பயணியின் பயணப் பொதியில் ஏவுகணை இயக்கும் கருவி இருந்தமை வழமையான விமான நிலைய சோதனையின் போது கண்டறியப்பட்டது.

'இராணுவப் பணிக்காக குவைத்தில் இருந்ததற்கு அடையாளமாக இவ் ஏவுகணை இயக்கும் கருவியை, தன் வசம் வைத்திருப்பதாக" வோஷிங்டன் சர்வதேச விமான நிலைய அதிகாரிகளிடம் குறித்த நபர் தெரிவித்துள்ளார்.

இந்த ஏவுகணை இயக்கும் கருவியைப் பாதுகாப்பாக செயலிழக்கச் செய்வதற்காக அது அரச தரப்பு தீயணைப்புப் பிரிவுப் படையிடம் ஒப்படைக்கப்பட்டது. "அதிர்ஷ்டவசமாக இந்தக் கருவி செயலில் இல்லை. அது உடனடியாக கைப்பற்றப்பட்டு உரிய துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

## ஆப்கானில் குண்டுவெடிப்பு 34 பேர் பலி; 23 பேர் காயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் ஹேரட் - கந்தஹார் அதிவேக பிரதான வீதியின் ஓரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததில் பேருந்து ஒன்றில் சென்று கொண் டிருந்தவர்களில் 34 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதல் நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்றதாக கந்தஹார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 3 சிறுவர்களும் சில பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அத்துடன் 6 சிறுவர்கள் உட்பட 23 பேர் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் எல்லை மாவட்டமான ஸ்பின் போல்டக்கின் வீதியோர சந்தைப் பகுதியை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## உலகளவில் போர் மற்று
## 12 ஆயிரம் குழந்தை

### ஐ.நா.அறிக்கையில்

**(ஜெனீவா)**

**உலகளவில் இடம்பெற்ற போர் மற்றும் வன்முறை**
**பரிதாபமாக உயிரிழந்ததாக ஐக்கிய நாடுகள் ச**
**தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மத்திய கிழக்கு நாடுகளான ஏமன் மற்றும் சிரியாவில் அரசிற்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த சில வருடங்களாக போர் இடம்பெற்று வருகின்றது.

இதேபோன்று, பாலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே காஸா எல்லையில் நடைபெறும் மோதலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

அத்துடன், ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கும் அரசுக்கும் இடையே கடந்த 18 வருடங்களாக போர் நிலவி வருகின்றது. இத்தகைய நாடுகளில், கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற போர் மற்றும் உள்நாட்டுக் கலவரங்களில் உயிரிழந்த குழந்தைகள் பற்றி ஐக்கிய நாடுகள் சபை ஆய்வு செய்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

## பாகிஸ்தானில் தொ
## உயிரிழப்பு 35 அ





(கராச்சி)

பாகிஸ்தானில் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் போன்ற விபத்துக்களில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்துள்ளது.

பாகிஸ்தான் நாட்டில் கடந்த சில நாட்களாக இடி மின்னலுடன் கனமழை பெய்து வருகிறது. கனமழை காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் திடீர் வெள்ளப்பெருக்கு, மின்சாரம் தாக்குதல் மற்றும் நிலச்சரிவு போன்ற சம்பவங்கள்

## பாகிஸ்தானில் குண்டு
## 5 பேர் பரிதாபமாக ப

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் குவெட்டா நகரில் பொலிஸாரைக் குறிவைத்து நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் 5 பேர் பரிதாபமாக பலியாகினர்.

பாகிஸ்தானின் தென்மேற்கு பலுசிஸ்தானில் குவெட்டா நகர் அருகில் பாச்சாகான் சவுக் பகுதி



# வெளிநாடு

## ...ற்றும் வன்முறைகளில் ...தைகள் உயிரிழப்பு

...ில் அதிர்ச்சித்தகவல்


**...வன்முறைகளில் பன்னிரண்டாயிரம் குழந்தைகள் ...டுகள் சபை விடுத்துள்ள அறிக்கையொன்றில்**

இது குறித்து ஐ.நா. வெளியிட்ட அறிக் கையில், 'கடந்த 2018 ஆம் ஆண்டு மட்டும் சிரியா, ஏமன், ஆப்கானிஸ்தான், பாலஸ்தீனம் ஆகிய நாடுகளில் உயிரி ழந்த குழந்தைகளின் எண்ணிக்கை பன்னிரண்டாயிரத்தை தாண்டியுள்ளது.

இந்த காலகட்டத்தில் கடத்தல், கிளர்ச்சியாளர்களாகப் பயன்படுத்தப்படு தல், பாலியல் ரீதியாகத் துன்புறுத்தல் மற்றும் பாடசாலைகள், வைத்தியசாலை கள் மீதான தாக்குதல்கள் எனப் பல்வேறு வன்முறைகள் குழந் தைகள் மீது நிகழ்த்தப்பட்டுள் ளன.

இதில் ஆயுதம் ஏந்திய பயங் கரவாதிகளின் வன்முறைகள் எந்தவித மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து அதே சீராக இருந்து வருகிறது' என்றும் சுட்டிக்காட்டி யுள்ளது. (ஐ)

## ...தாடரும் கனமழை ...ஆக அதிகரிப்பு



நிகழ்ந்து வருகின்றன. மேலும், கனம ழையால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு மக்கள் கடும் பாதிப்புகளுக்கு உள் ளாகி வருகின்றனர். கனமழையால் நாட்டின் பல்வேறு நகரங்களில் மின்சார இணைப்புத் துண்டிக்கப்பட்டு இருளில் மூழ்கியுள்ளது. உள்நா ட்டு மற்றும் சர்வதேச விமானப் போக்குவரத்தும் தடைப்பட்டுள் ளது. இந்நிலையில் உயிரிழப்பு 35 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## ...ாடுவெடிப்பு; ...க மரணம்!




யில் பொலிஸ் நிலையம் அமை ந்துள்ளது.

இதன் வெளியே நிறுத்தப் பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்ட சக்தி வாய்ந்த வெடிகுண்டு அடையாளம் தெரியாத நபர்களால் இயக் கப்பட்டுத் திடீரென வெடித்துச் சிதறியது.

பொலிஸ் வாகனத்தை குறி வைத்து நடத்தப்பட்ட இந்த வெடி குண்டுத் தாக்குதலில் 5 பேர் பரிதாபமாக ப்லியாகி னர்.

மேலும் 30 பேர் படுகாயம் அடைந்தனர். (ஐ)

அமெரிக்காவில் ஜனாதிபதித்தேர்தல்

## ஆப்கானில் அமெ.படைகளை குறைக்க ட்ரம்ப் உத்தரவு

(நியூயோர்க்)

அமெரிக்காவில் அடுத்தாண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக ஆப்கானி ஸ்தானில் இருக்கும் அமெரிக்கப் படை வீரர்களின் எண்ணிக் கையைக் குறைக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.



அமெரிக்காவில் நடந்த இரட் டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு, அல்கொய்தா பயங்கர வாத அமைப்புக்கு ஆதரவளித்து வந்த ஆப்கானிஸ்தான் மீது அமெ ரிக்கா போர் தொடுத்தது.

இதில் அங்கு ஆட்சியில் இரு ந்த தலிபான்கள் விரட்டியடிக் கப்பட்டு, ஜனநாயக ஆட்சி மலர் ந்தது.

ஆனாலும் தலிபான்களை முழுமையாக வீழ்த்த முடியவி ல்லை.

இதனால் அரசுக்கு ஆதரவாக தலிபான்களுடன் போரிட அமெ ரிக்கப் படைகள் அங்கு முகா மிட்டுள்ளன.


தனது படைகளை அமெரிக்கா முழுமையாகத் திரும்பப்பெற வேண்டும் என தலிபான்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் அமெரிக்கா வில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக ஆப்கானிஸ்தானில் இருக்கும் அமெரிக்கப் படை வீரர்களின் எண்ணிக்கையை குறைக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## பெரு நாட்டில் கோரவிபத்து! பெண்கள் உட்பட 20 பேர் பலி!

(லிமா)

பெரு நாட்டில் மினி பஸ் மோதிய விபத்தில் பெண்கள் உட்பட 20 பேர் பலியாகினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.




பெரு நாட்டின் காண்டா மாகா ணத்தில் மினி பஸ் ஒன்றில் 27 பேர் பயணம் செய்தனர். திடீ ரென வேகக்கட்டுப்பாட்டை இழ ந்த மினி பஸ் வீதியில் இருந்து விலகி குன்றின் மீது மோதியது.

இந்த விபத்தில் மினி பஸ்சில் பயணம் செய்த 20 பேர் பரிதா பமாக பலியாகினர். இதில் 11 பெண்கள், 9 ஆண்கள் அடங்கு வர். தகவலறிந்த பொலிஸார் அங்கு விரைந்து சென்றனர். அவர்கள் படுகாயமடைந்தவர் களை மீட்டு அருகிலுள்ள வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். (ஐ)

## ரோமியோ - ஜூலியட் கல்லறை கண்டுபிடிப்பு

(நுர்-சுல்தான்)

கஜகஸ்தான் நாட்டில் 4000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த காதல் ஜோடியின் கல்லறை ஆராய்ச்சியாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.



கஜகஸ்தான் நாட்டின் கார கண்டா மாநிலத்தில் தொல்லியல் துறை ஆராய்ச்சியாளர்கள் ஆரா ய்ச்சியில் ஈடுபட்டு வருகின்ற னர்.

அங்கு ஒரு குறிப்பிட்ட பகுதி யில் குழி தோண்டி ஆராய்ச்சி மேற்கொண்டனர்.

அப்போது இரண்டு எலும்புக் கூடுகள் ஒன்றாக புதைக்கப்பட்ட கல்லறை ஒன்று இருந்துள்ளது. அந்த எலும்புக்கூடுகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பதை போல இருந்துள்ளது.

இந்த எலும்புக்கூடுகளைக் கண்டதும் ஆராய்ச்சியாளர்கள் வியப்பில் ஆழ்ந்தனர்.

அருகிலேயே ஏராளமான தங்கம், வெள்ளி நகைகள் இரு ந்துள்ளன. ஒரு எலும்புக் கூட் டின் அருகே வளையல்களும், மோதிரங்களும் இருந்துள் ளன. (ஐ)

# ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கினால் ரணிலை வீட்டுக்கு அனுப்புவோம்

## விஜயதாஸ சவால்



**(கொழும்பு) காணி விசேட திருத்தச் சட்ட மூலத்துக்கு எதிராக நீதிமன்றம் சென்றதற்காக தமக்கு எதிராக முடிந்தால் மக்களை அணிதிரட்டிக் காட்டுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாராளு மன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜ பக்ஷ சவால் விடுத்தார். அத்துடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க பொது வேட்பாளராகக் களமிறங்குவாராக இருந்தால் பிணை எதுவுமின்றி அவரை வீட்டுக்குத் திருப்பியனுப்புவோம் என்றும் எச்சரித்தார்.**

கொழும்பு இலங்கை மன்றக்கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காணி விசேட திருத்தச் சட்டமூலத்தை கொண்டு வருவதற்கு 2003 ஆம் ஆண்டு முயற்சித்தார். அதற்கு நீதிமன்றத்தின் எதிர்ப்பு வெளியாகியதால் அதனைக் கொண்டு வர முடியாமல் போனது. அதன் பின்னர் 2015 ஆம் ஆண்டு முதல் மீண்டும் காணி விசேட திருத்தச்சட்ட மூலத்தை கொண்டு வருவதற்கு முயற்சிகளை எடுத்து வருகிறார். அமைச்சரவையில் இந்த திருத்தச் சட்டமூலத்துக்கு நான் எதிர்ப்பை வெளியிட்டதால் அவரின் முயற்சிகள் தோல்வியடைந்தன.

அதன் பின்னர் இறுதியாக கடந்த வருடம் ஒக்டோபர் 23 ஆம் திகதி மீண்டும் இந்த திருத்தச் சட்ட மூலம் மீண்டும் அமைச்சரவைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதும் எனது எதிர்ப்பை நான் வெளியிட்டிருந்தேன்.

தற்போது இந்தக் காணி விசேட திருத்தச் சட்ட மூலத்துக்கு காணி அமைச்சர் கயந்த கருணாதிலக்கவுக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் வலுக்கட்டாயமாக இந்தத் திருத்தச் சட்ட மூலத்துக்கான கையொப்பத்தை பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஆகவே இந்த திருத்தச்சட்ட மூலத்தினூடாக இலங்கையின் காணிகளை வெளிநாட்டு உடன் படிக்கைகளைக் கொண்டு அந்த நிறுவனங்களுக்கு விற்பதற்கே முயற்சி செய்கிறார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தாஜுடீன் கொலை விவகாரம்

# அநுரவுக்கு எதிரான வழக்கு மீண்டும் விசாரணைக்கு




(கொழும்பு)

பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுடீன் கொலை விவகாரம் தொடர்பாக முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க மீதான வழக்கு விசாரணை ஒக்டோபர் 23 இல் எடுத்துக்கொள்ளப்படும் என மேல் நீதிமன்றம் அறிவித்தது.

வசீம் தாஜுடீன் கொலை விவகாரம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வசீம் தாஜுடீன் கொலை விவகாரம் தொடர்பான வழக்கில் ஆதாரங்களை மறைத்ததாக அநுர சேனநாயக்க மீது குற்றம் சாட்டப்பட்டு, குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர், கடந்த மாத இறுதியில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.



குறித்த கொலை விவகாரம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது தண்டனைச் சட்டத்தின் பிரிவு 198 இன் கீழ் குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டன.

இந்த வழக்கு தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய முன்னாள் குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி சுமித் பெரேரா, முன்னாள் நீதித்துறை மருத்துவ அதிகாரி டாக்டர் ஆனந்த சமரசேகர ஆகியோருக்கு உயர் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கைப் பெண்ணுக்கு சைபிரஸில் கத்திக்குத்து

(லிமாசோல்)

சைபிரஸில் இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவர் கத்திக் குத்துக்கிலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அந்நாட்டு ஊடகமான "சைபிரஸ் மெய்ல்" செய்தி வெளியிட்டது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சைபிரஸின், லிமாசோலின் சாக்காய் பகுதியில் உள்ள வீடொன்றில் பணிபுரிந்து வந்த 49 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கத்திக்குத்துக்கு இலக்கானார்.

குறித்த பெண்ணுக்கும் அவரது கணவருக்குமிடையில் விவாகரத்து விடயம் தொடர்பாக இடம்பெற்ற வாக்குவாதம் காரணமாக இந்த அனர்த்தம் இடம்பெற்றதாக லிமாசோலில் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் வயிறு, தலை மற்றும் கழுத்துப் பகுதியில் காயங்களுக்குள்ளான பெண், லிமாசோல் வைத்தியசாலையில் அறுவைச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந் நிலையில் சந்தேக நபர் சைபிரஸை விட்டு வெளியேற முயன்றபோது லர்னகா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உண்மையும் தர்மமும்

எப்பவும் உண்மையே பேச வேண்டும். அதுதான் நல்லது என்று ஒருவரிடம் சொன்னேன். உடனே அவர் என்னுடன் சண்டைக்கு வந்து விட்டார்.

சேர் உங்கள் உபதேசம் எல்லாம் ஏமாந்தவர்கள் யாராவது இருந்தால் அவர்களிடம் சொல்லுங்கள். எனக்கு வேண்டாம். ஆளை விட்டு விடுங்கள் என்று சொல்லி விட்டு ஓடப் பார்த்தார். நான் விடவில்லை. என்ன விடயம் என்று சொல்லி விட்டு அதன் பின் ஓடிவிடுங்கள் என்றேன்.

அவர் சொன்னார் போன வாரம் புகையிரத நிலையத்தில் ஒரு பெரிய சூட்கேசுடன் நின்று கொண்டிருந்தேன். பக்கத்திலே ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவரிடம் சொல்லி இந்தச் சூட்கேசை கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள். அதோ அங்கே போய் தண்ணீர் குடித்து விட்டு வருகிறேன் என்றார்.

நான் தண்ணீர் குடித்து விட்டு திரும்பி வந்து பார்க்கிறேன். அந்த ஆளையும் சூட்கேசையும் காணவில்லை. கொள்ளையடித்துக் கொண்டு போய் விட்டான். ஐயோ பாவம் என்றேன்.

உண்மை பேச வேண்டும் என்று சொல்லுகிறீர்களே அதனால் வந்த கஷ்டம் தான் சேர் அது என்றார். எப்படி என்று கேட்டேன்.

"பெட்டியைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று நான் சொன்ன போதே அந்த ஆள் பெட்டிக்குள்ளே என்ன இருக்குது என்றார். நான் உண்மையைச் சொல்லி விட்டேன். 15 ஆயிரம் ரூபா பணம் இருக்கிறது என்று புலம்ப ஆரம்பித்தார்.

சத்தியம் பேசுவது உத்தமமான காரியம் தான். அதிலே ஒன்றும் சந்தேகம் வரவேண்டியது இல்லை. ஆனால் தருமம் என்பது ரொம்ப சூட்சுமமாக உள்ளது. எது தர்மம், எது அதர்மம் என்று நமக்குப் புரிவதில்லை. அதனால் தான் சத்தியம் பேசுகின்றேன் என்று சொல்லி விட்டு சங்கடத்திலே மாட்டிக் கொள்கின்றோம்.

கௌசிகர் என்று ஒரு முனிவர் இருந்தார். உடனே உனக்கு ரொம்பப் பழக்கமா அவர்? என்று கேட்காதீர்கள். புராண காலத்து முனிவர் அவர். பொய்யே சொல்லாதவர் என்று பெயர் வாங்கியிருந்தார். அவர் ஒரு காட்டிலே இருந்தார்.

அப்ப ஒருநாள் சிலபேர் பயந்து அந்தப் பக்கமாக ஓடிவந்தார்கள். என்ன விடயம் என்று கேட்டார். திருடர்கள் சில பேர் எங்களைத் துரத்திக் கொண்டு வருகிறார்கள். அதுதான் இந்தப் பக்கமாக ஓடி வந்தோம் என்று சொல்லிக் கொண்டே புதர் மறைவில் ஒளிந்து கொண்டார்கள்.

அவர்கள் ஒளிந்து கொண்ட இடம் முனிவருக்குத் தெரியும். கொஞ்ச நேரத்தில் அந்தத் திருடர்களும் அந்தப் பக்கமாக ஓடி வந்தார்கள். அவர் பொய்யே பேசாதவர் என்பது அவர்களுக்குத் தெரியும்.

சுவாமி நீங்கள் பொய்யே சொல்லாதவர். அதனால் எங்களுக்கு ஒரு உண்மையைச் சொல்ல வேண்டும். எங்களுக்குப் பயந்து கொண்டு இந்தப் பக்கமாக சிலபேர் ஓடி வந்தார்களே...அவர்கள் எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்? என்று கேட்டார்கள்.

முனிவர் தான் பொய் சொல்ல மாட்டாரே, உடனே அவர்கள் ஒளிந்திருந்த இடத்தைக் காட்டிக்கொடுத்து விட்டார். திருடர்கள் அவர்களைக் கொன்று விட்டு அவர்களிடமிருந்ததையெல்லாம் எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

உண்மை பேசிய அந்த முனிவர் சொர்க்கத்திற்குப் போகவில்லையாம். நேராக நரகத்திற்குப் போய் விட்டாராம். இந்தக் கதையை ஸ்ரீகிருஷ்ணர் சொன்னார். அதைக் கேட்ட அர்ச்சுனனுக்கு இது ஆச்சரியமாக இருந்தது.

இது என்ன வேடிக்கையாக இருக்கிறது. சத்தியம் சொன்னதற்கு நரகமா? என்று கேட்கிறார். அதற்கு கிருஷ்ணர் பதில் சொல்கிறார். உண்மையைப் பேசுவதனால் ஏற்படுகின்ற ஒரு நன்மையை பொய் பேசுவது கொடுக்கும் என்றால் அந்தச் சமயத்தில் பொய் தான் உண்மை.

அதேபோல் பொய் பேசுவதனால் ஏற்படுகின்ற ஒரு தீமையை உண்மை பேசுவது கொடுக்கும் என்றால் அப்ப அந்த உண்மை தான் பொய். எந்தத் தர்மமாக இருந்தாலும் சரி அதனாலே இன்னொருத்தருக்கு இம்சை விளையுமென்றால் அது அதர்மம்.சத்தியம் பேசுவதனால் ஒரு தீமை விளையும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தச் சமயத்தில் மௌனமாக இருந்து விடுவதுதான் நல்லது. அப்படி இருக்க முடியவில்லை என்றால் பொய் சொல்லலாம். அதனால் பாவம் இல்லை.

விவாக சமயங்களிலே மனைவியோடு தனித்து இருக்கின்ற போது எவர் உயிருக்காவது ஆபத்து ஏற்படுகின்ற சமயங்களிலே வேடிக்கையாகப் பேசுகின்ற சமயங்களிலே இதுபோன்ற நேரத்தில் பொய் சொன்னால் பாவம் இல்லை என்று பெரியவர்கள் சொல்லி இருக்கின்றார்கள்.

அதனால்தான் சில வீடுகளில் பாருங்கள் வீட்டுக்கார அம்மா ஞாபக மறதியால் கோப்பியிலே சீனிக்குப் பதிலாக உப்பைப் போட்டு கொண்டு வந்து வைத்துவிட்டு கோப்பி எப்படி என்று அபிப்பிராயம் கேட்பார்கள். இவரும் ரொம்ப சாமர்த்தியமாக இந்த கோப்பிக்கு ஈடு இணை இந்த உலகத்திலேயே கிடையாது என்பார்.


அதுமட்டுமல்ல உண்மையைச் சொல்லி அதாவது ஒரு சத்தியத்தைப் பேசி ஒரு இம்சையை எதற்கு விலை கொடுத்து வாங்க வேண்டும் என்பதற்காக அவர் இப்படிச் செய்கிறார். எது தர்மம், எது அதர்மம் என்ற விடயத்திலே இவர் மிகவும் கில்லாடி.

அர்ச்சுனனுக்கு கிருஷ்ணர் பாடம் சொன்னார். இவர் அவருக்கே பாடம் சொல்லிக் கொடுப்பார் போல இருக்கே!

# கன்னியா சிவன் ஆலயத்தில் நேற்று விசேட வழிபாடுகள்

## அருகிலுள்ள விகாரையில் பௌத்தர்கள் திரள்வு







(திருகோணமலை)

ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு திருகோணமலை - கன்னியா வெந்நீரூற்று பகுதியிலுள்ள சிவன் ஆலயத்தில் நேற்று விசேட பூஜைகள் இடம்பெற்றன. ஆடி மாதம் என்றாலே பல்வேறு திருவிழாக்கள் நடக்கும் தெய்வீக மாதமாகும். அதில் ஆடி அமாவாசை எந்தவொரு காரியத்தையும் தொடங்குவதற்கு மிகச் சிறப்பான நாளாகவும், பிதுர்களை வழிபடக்கூடிய நாளாகவும் பார்க்கப்படுகிறது. இவ்வாறான நிலையிலேயே கன்னியா வெந்நீரூற்று சிவன் ஆலயத்திலும் விசேட வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆடி அமாவாசையன்று கன்னியா வெந்நீரூற்று சிவன் ஆலயத்தில் இந்து பக்தர்கள் வழிபாடுகளில் ஈடுபடுவதைத் தடுக்கக் கூடாது என்ற தடை உத்தரவும் திருகோணமலை மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

சர்ச்சைக்குரிய கன்னியா வெந்நீரூற்று பகுதி ஆலய விவகாரம் தொடர்பான வழக்கு கடந்த 22 ஆம் திகதி திருகோணமலை மாவட்ட மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்தத் தடை உத்தரவும்பிறப்பிக்கப்பட்டது. இதே வேளை கன்னியா வெந்நீரூற்று சிவன் ஆலயத்திற்கு அருகிலுள்ள விகாரையிலும் நேற்றுச் சிறப்பு வழிபாடுகள் பௌத்தர்களால் மேற்கொள்ளப்பட்டன. (இ-7)





# வேண்டுகோளுக்கிணங்கவே ஹக்கீம் அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றார்


## பைசல் காஷிம் விளக்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே ரவூப் ஹக்கீம் அமைச்சுப் பதவியை மீண்டும் பொறுப்பேற்றார் எனப் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காஷிம் தெரிவித்தார்.

அத்துடன் நாங்கள் யாரும் கட்சியிலிருந்து பிரிந்துசெல்லவில்லை. சமூகத்தின் பிரச்சினைகளைச் சாதுரியமாகக் கையாளக் கூடிய ஒருவர் அமைச்சரவையில் இருக்கவேண்டியது காலத்தின் தேவையாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ரவூப் ஹக்கீம் அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



கல்முனை விவகாரம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை கடந்த திங்கட்கிழமை அமைச்சரின் இல்லத்தில் இடம்பெற்றது. சுமார் மூன்று மணித்தியாலங்களாக நடைபெற்ற இந்தப்பேச்சுவார்த்தையின் போது ஓர் இணக்கப்பாட்டுடன் கூடிய முடிவு எடுக்கப்பட்டது. அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் சம்மதமும் பெறப்பட்டது.

கடைசியாக, கல்முனை நிர்வாக அலகு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களான நாங்கள், தலைவர் ரவூப் ஹக்கீமிடம் அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்குமாறு கூறினோம். அந்தப் பின்னணியில் தான் அவர் அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார் என்றும் அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்தார். (இ-7)

## திருத்தம்

**30.07.2019 அன்று வலம்புரியில் வெளிவந்த யாழ்ப்பாண விஞ்ஞானச்சங்கத்தின் வருடாந்த ஆய்வு மாநாடு பற்றிய கட்டுரையின் தலைப்பை "யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தால் நடத்தப்படும் 26 ஆவது வருடாந்த ஆய்வு மாநாடு" எனத் திருத்தி வாசிக்கவும்.**

ஆசிரியர் - பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

# அரிசி நுகர்வு தொடர்பில் புதிய ஆய்வுகள் வெளியீடு

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் தனிநபரொருவரின் அரிசி நுகர்வானது 169 கிலோகிராம் என புதிய ஆய்வுகள் மூலம் வெளியானது.

கடந்த 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான தரவை அடிப்படையாகக் கொண்டு, இந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதென, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்தது.

அதே போல், இலங்கையின் வருடாந்த தனிநபர் மரக்கறி நுகர்வானது 132 கிலோகிராம் என்றும் பழங்களின் நுகர்வு 42 கிலோகிராம் என்றும் ஆய்வுகள் மூலம் அறியமுடிகிறது. (இ-7)

# தேர்தல்கள் ஆணைக்குழுவிற்காக 15 புதிய வாகனங்கள் கொள்வனவு

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல்களுக்குப் பயன்படுத்துவதற்காக 15 வாகனங்களைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் முடிவு செய்தது.

இதற்கான நிதியைப் பெற்றுக்கொள்ளும் அமைச்சரவைப் பத்திரத்திற்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

தேர்தல் ஆணைக்குழு இதுவரையில் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் திட்டமிட்டு வருகின்றது. தேர்தல்களை செயற்றிறன் மிக்கதாகவும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றக் கூடிய வகையில் இந்த ஆணைக்குழுவிற்கு 15 வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குத்தேவையான நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிள்ளையானின் மறியல் நீடிப்பு



(ஏறாவூர்)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதிவரை மீண்டும் விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி எம்.வை.எம்.இஸ்ஸதீன் உத்தரவிட்டார்.

கடந்த 2005.12.25 ஆம் திகதி அன்று மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையில் ஈடுபட்டிருந்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பாக பிள்ளையான் உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணிகளின் சுகயீனம் காரணமாக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-7)

# தொடர்மாடி வீடுகளின் (Condominium) கூட்டுச் சொத்துரிமையும் அதன் பராமரிப்பும்

15

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



➢உள்ளூராட்சி சபையின் இணக்க சான்றிதழ் **(certificate of conformity)**

➢கட்டடம் அமைந்துள்ள காணித்துண்டின் உரித்துச் சான்றிதழ் **(deed / title)**

➢காணி அடைமானம் வைப்பது சம்பந்தமான ஒவ்வொரு நபரினதும் எழுத்துமூல ஒப்புதல்/ விருப்பு கடிதம்.

➢கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகார சபையினால் வழங்கப்பட்ட பொதுக்கூறுகள் மற்றும் பொதுவசதிகள் சம்பந்தமான சான்றிதழ். இச் சான்றிதழில் பொதுக்கூறுகள் மற்றும் பொது வசதிகள் திருப்திகரமான முறையில் செய்யப்பட்டுள்ளதென்றும் அவற்றின் நிர்வாகம், கட்டுப்பாடு, பராமரிப்பு போன்றவை ஒழுங்காக நடைபெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றும் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

➢இக் கூட்டுரிமை ஆதனம் முதலில் அரை கூட்டுரிமை ஆதனமாக **(semi condominium property)** அல்லது முன்னேற்பாட்டு கூட்டுரிமை ஆதனமாக **(provisional condominium property)** காணி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அதன் விபரங்கள்.

➢இவ் ஆதனத்திற்கான பிரகடன உறுதி எழுதப்பட்டு நொத்தாரிசினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

❖ அரைக் கூட்டுரிமை ஆதனத்தை **(semi condominium property)** காணிப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்தல்.

2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இருபிடிக் கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தச்) சட்டத்தின் Apartment Ownership **(Amendment) Act (No. 39 of 2003)** பிரிவு **3A**

ஒரு அரை கூட்டுரிமை ஆதனத்தை **(semi condominium property)** பதிவு செய்வதற்கான விண்ணப்பம் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட வேண்டும். அதன் மூலப்பிரதியும் இரண்டாம் பிரதியும் காணிப்பதிவு அலுவலகத்திற்கும் மூன்றாம் பிரதி கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகார சபைக்கும் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

➢பரிந்துரைக்கப்பட்டுள்ள கட்டணம்.

➢திட்டமிடல் அதிகாரியினால் அனுமதிக்கப்பட்ட கட்டட வரைபடத்தின் **(approved building plan)** மூன்று பிரதிகள்.

➢2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இருபிடிக்கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 5இல் கூறப்பட்ட விபரங்கள் உள்ளடக்கிய அரை கூட்டுரிமை ஆதனப்படம் **(semi condominium plan)** மூன்று பிரதிகள்.

➢2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இருபிடிக்கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 3(2) (d) கூறப்பட்ட விபரங்கள் உள்ளடக்கிய தகுதிபெற்ற கட்டடக்கலைஞரின் அல்லது தகுதிபெற்ற கட்டடப் பொறியியலாளரின் சான்றிதழ்.

➢உள்ளூராட்சி சபையின் இணக்க சான்றிதழ் **(certificate of conformity).**

➢கட்டடம் அமைந்துள்ள காணித்துண்டின் உரித்துச் சான்றிதழ் **(deed / title).**

➢காணி அடைமானம் வைப்பது சம்பந்தமான ஒவ் வொரு நபரினதும் எழுத்துமூல ஒப்புதல்/விருப்பு கடிதம்.

➢கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகார சபையினால் வழங்கப்பட்ட பொதுக்கூறுகள் மற்றும் பொதுவசதிகள் சம்பந்தமான சான்றிதழ். இச் சான்றிதழில் பொதுக்கூறுகள் மற்றும் பொதுவசதிகள் திருப்திகரமான முறையில் செய்யப்பட்டுள்ளதென்றும் அவற்றின் நிர்வாகம், கட்டுப்பாடு, பராமரிப்பு போன்றவை ஒழுங்காக நடைபெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றும் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

➢இக் கூட்டுரிமை ஆதனம் முதலில் முன்னேற்பாட்டு கூட்டுரிமை ஆதனமாக **(provisional condominium property)** காணி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அதன் விபரங்கள்.

➢இவ் ஆதனத்திற்கான பிரகடன உறுதி எழுதப்பட்டு நொத்தாரிசினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

❖ முன்னேற்பாட்டு கூட்டுரிமை ஆதனத்தை **(Provisional condominium property)** காணிப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்தல்.

2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இருபிடிக்கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தச்) சட்டத்தின் **Apartment Ownership (Amendment) Act (No. 39 of 2003)** பிரிவு **3A**

ஒரு முன்னேற்பாட்டு கூட்டுரிமை ஆதனத்தை **(Provisional condominium property)** பதிவு செய்வதற்கான விண்ணப்பம் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட வேண்டும். அதன் மூலப்பிரதியும் இரண்டாம் பிரதியும் காணிப்பதிவு அலுவலகத்திற்கும் மூன்றாம் பிரதி கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகார சபைக்கும் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

➢பரிந்துரைக்கப்பட்டுள்ள கட்டணம்.

➢திட்டமிடல் அதிகாரியினால் அனுமதிக்கப்பட்ட கட்டட வரைபடத்தின் **(approved building plan)** மூன்று பிரதிகள்.

➢2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இருபிடிக் கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 5 இல் கூறப்பட்ட விபரங்கள் உள்ளடக்கிய முன்னேற்பாட்டு கூட்டுரிமை ஆதனப்படம் **(Provisional condominium plan)** மூன்று பிரதிகள்.

➢2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இருபிடிக் கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 3(2) (d) கூறப்பட்ட விபரங்கள் உள்ளடக்கிய தகுதிபெற்ற கட்டடக்கலைஞரின் அல்லது தகுதிபெற்ற கட்டடப் பொறியியலாளரின் சான்றிதழ்.

➢உள்ளூராட்சி சபையின் இணக்க சான்றிதழ் **(certificate of conformity).**

➢கட்டடம் அமைந்துள்ள காணித்துண்டின் உரித்துச் சான்றிதழ் **(deed / title)**

➢காணி அடைமானம் வைப்பது சம்பந்தமான ஒவ் வொரு நபரினதும் எழுத்துமூல ஒப்புதல் / விருப்பு கடிதம்.

➢கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகார சபையினால் வழங்கப்பட்ட பொதுக்கூறுகள் மற்றும் பொதுவசதிகள் சம்பந்தமான சான்றிதழ். இச் சான்றிதழில் பொதுக்கூறுகள் மற்றும் பொது வசதிகள் திருப்திகரமான முறையில் செய்யப்பட்டுள்ளதென்றும் அவற்றின் நிர்வாகம், கட்டுப்பாடு, பராமரிப்பு போன்றவை ஒழுங்காக நடைபெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றும் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

➢ஏற்படப்போகும் செலவீனம் சம்பந்தமான நிதி அறிக்கை.

➢திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள்.

➢இவ் ஆதனத்திற்கான பிரகடன உறுதி எழுதப்பட்டு நொத்தாரிசினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**❖கூட்டுரிமை ஆதனத்தை பதிவு செய்யும் கால எல்லை**

ஒரு கூட்டுரிமை ஆதனத்தின் விற்பனை அல்லது விற்பனைக்கான ஒப்பந்தம் கைச்சாத்திட்டு 18 மாதங்களுக்குள் அல்லது ஒரு கூட்டுரிமை ஆதனம் கட்டி முடித்து 3 மாதங்களுக்குள் இவ்விரு சந்தர்ப்பங்களில் எது முதலில் நடைபெறுகிறதோ அதற்கமைய ஆதனத்தை காணிப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

### தொடர்மாடி வீடொன்றை/கூட்டுரிமை ஆதனமொன்றைக் கொள்வனவு செய்யும் போது கவனிக்க வேண்டிய சில விடயங்கள்

தனியார் துறையைச்சேர்ந்த பல கம்பனிகளாலும் தனி ஆட்களாலும் தொடர்மாடிக் கட்டடங்கள் நிர்மணிக்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகளால் மிகவும் விலைகூடிய மிகுந்த சுகபோக வசதிகளைக்கொண்ட தொடர்மாடிக் கட்டடங்கள் நிர்மணிக்கப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும் எந்தத் தரத்தை சேர்ந்த தொடர்மாடிக் கட்டட அலகினை கொள்வனவு செய்யக் கருதினாலும் கீழே குறிப்பிட்ட விடயங்கள் மீது வாங்குபவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

தொடர்மாடி வீடொன்றை/கூட்டுரிமை ஆதனமொன்றைக் கொள்வனவு செய்கையில் தெரிவு செய்யப்படுகின்ற கூறு அதாவது வீடு மற்றும் அதன் உட்புறம் பற்றி மாத்திரம் கவனம் செலுத்துவது போதுமானதாக அமையாது.

அதற்கான காரணம் வாங்குபவர்கள் பிறிதொரு குழுவினருடன் கூட்டாக வசிக்கத்தயாராக இருப்பதனால் அதற்கான வசதிகள் முறையாக வழங்கப்பட்டுள்ளனவா? என்பதுபற்றி முதலில் கண்டறிதல் வேண்டும்.

தொடர்மாடி வீடொன்றை கொள்வனவு செய்பவர், அக்கட்டடத் தொகுதியை நிர்மாணிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபை வழங்கியுள்ள ஆதன அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கட்டடத்திட்டம் **(Building Plan)** மாத்திரமன்றி இசைவுச் சான்றிதழ் (பல சந்தர்ப்பங்களில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ஆரம்ப திட்டவரைபு இசைவுச் சான்றிதழ் **-Preliminary Planning Clearance from UDA)** போன்றவற்றை பரிசீலனை செய்வதற்காக காண்பிக்குமாறு அல்லது பிரதி ஒன்றைத்தருமாறு வீடு கட்டுபவரிடம் **(Developer)** வேண்டுகோள் விடுக்க இயலும்.

(தொடரும்...)

# மக்களின் பாதுகாப்பிற்காக முஸ்லிம் தலைவர்கள் கட்சி பேதம் பார்க்கவில்லை

## வியாழேந்திரன் விமர்சனம்



(கொழும்பு)
முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் முஸ்லிம் தலைவர்கள் கட்சி பேதம் பார்க்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் தெரிவித்த அவர், "கடந்த காலங்களில் முஸ்லிம் மக்களுக்குப் பிரச்சினைகள் ஏற்பட்டபோது, முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படவில்லையெனத் தெரிவித்து தமது பதவிகளை முஸ்லிம் தலைமைகள் இராஜினாமா செய்தன.

அதன் பின்னர் மீண்டும் பதவிகளை பொறுப்பேற்றபோது, மக்களின் பல பிரச்சினைகளை தீர்த்து வைக்குமாறு நிபந்தனைகளை முன்வைத்தே அவர்கள் தமது பதவிகளை பொறுப்பேற்றனர்.

ஆனால் கடந்த காலங்களில் பல கோரிக்கைகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டபோதும், அவற்றில் எதனையுமே பெற்றுக்கொள்ள முடியாதுள்ளமை வேதனையான விடயமாகும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# 3 இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம்
# சட்டமா அதிபரின் மேன்முறையீட்டு மனு இடைக்காலக் கட்டளையின்றி ஒத்திவைப்பு

(கொழும்பு)
நாவற்குழி இராணுவ முகாம் அதிகாரியால் கைது செய்யப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட 3 இளைஞர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்களை விசாரிப்பதற்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் வழங்கிய கட்டளையைத் தள்ளுபடி செய்யக் கோரும் சட்டமா அதிபரின் மேன்முறையீட்டு சிறப்பு அனுமதி மனுவை இடைக்காலக் கட்டளையின்றி உயர் நீதிமன்றம் ஒத்தி வைத்தது. இன்றும் நாளையும் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இராணுவ அதிகாரி துமிந்த கெப்பிட்டிவலன உள்ளிட்டவர்களிடம் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அதனைத் தடுக்கும் வகையில் சட்டமா அதிபர் உயர் நீதிமன்றில் இந்த மனு விசாரணைக்கு எடுக்கக் கோரியிருந்தார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜெயசூரிய, நீதியரசர்கள் எச்.பி.பி. டெகிதெனிய, முருது எம்.பி. பெர்னாண்டோ ஆகியோர்கொண்ட அமர்வு முன்னிலையில் இந்த மேன்முறையீட்டு சிறப்பு அனுமதி மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜெயசூர்ய சட்டமா அதிபராக இருந்த போது இந்த ஆட்கொணர்வு மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இடம்பெற்றதால், இந்த மனுவை விசாரிப்பதில் இருந்து அவர் விலகினார். அதனால் ஏனைய நீதியரசர்கள் இருவரும் மனுவை விசாரித்தனர்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் வழங்கிய கட்டளையை இடைநிறுத்தி வைக்கும் வகையில் கட்டளையிடுமாறு சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மூத்த மேதிக மன்றாடியார் அதிபதி சணிஜெய் ராஜரட்ணம் உயர் நீதிமன்றில் சமர்ப்பணம் செய்தார்.

எனினும் மேல் நீதிமன்றின் கட்டளையை இடைநிறுத்தும் கட்டளையை வழங்க மறுத்த உயர் நீதிமன்றம், எதிர் மனுதாரர்களான பாதிக்கப்பட்டோருக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டது. மனு மீதான விசாரணை செப்டெம்பர் முதலாம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (இ-10)


# அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்திக்கூட மட்டு.பல்கலை.நிறுவனத்தை கைப்பற்ற முடியாது

(கொழும்பு)
மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தை எக்காரணம் கொண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்க முடியாது என்றும் அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்திக் கூட எமது நிறுவனத்தை கைப்பற்ற முடியாது. எனினும் அரசாங்கத்துடன் இணைந்து 50:50 என்ற அடிப்படையில் நிர்வாகத்தைப் பங்கிட நாம் தயார் எனவும் மட்டக்களப்பு பல்கலைக்கழக நிறுவனத்தின் ஸ்தாபகரும் முன்னாள் கிழக்கு ஆளுநருமான எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா சவால் விடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலை அடுத்து மட்டு.பல்கலை. நிறுவனம் மீதும் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா மீதும் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையிலும் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்புக்குழு அறிக்கை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அது குறித்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் ஹிஸ்புல்லா நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார். (ஐ)

# கண்டி பெரஹெரவிற்கு பாதுகாப்புப் பணியில் 6000 பொலிஸார்-2000 இராணுவத்தினர்

(கொழும்பு)
இலங்கைவாழ் பௌத்தர்களின் மிக முக்கிய சமய கலாசார நிகழ்வாக விளங்கும் கண்டி எசல பெரஹெர இவ்வருடமும் நாளை 2 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக தெரிவித்த கண்டி தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்கதெல, சுமார் 6000 இற்கும் அதிகமான பொலிஸாரும் 2000 இற்கும் அதிகமான இராணுவத்தினரும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.



கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# மத போதனை செய்வதாயின் உரிய அனுமதி பெற வேண்டும்

(பொன்னாலை)
மத போதனைகளை நடத்துகின்ற இடம் தொடர்பாக உரிய வகையில் அனுமதி பெறப்பட்டு அந்த நிலையத்தை பதிவுசெய்த பின்னரே அங்கு மதக் கூட்டங்கள் மற்றும் பிரசாரங்களை நடத்த முடியும் என வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். பொன்னாலையில் குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட இந்திய வீட்டில் அக்குடும்பம் வசிக்காத நிலையில், அந்த வீட்டில் கிறிஸ்தவ மதமாற்ற சபையொன்று சண்டேஸ்கூல் என்ற பெயரில் மத போதனையை நடத்திக்கொண்டிருந்தது. இதற்கு எதிராக அப்பகுதி மக்கள் திரண்டு அவர்களை வெளியேறுமாறு கூறிவந்தனர்.

எனினும், அவர்கள் தொடர்ந்தும் அங்கு மதக் கூட்டம் நடத்தப்படும் எனக் கூறியதால் கடந்த 28 ஆம் திகதி அப்பகுதி மக்கள் மீண்டும் அவர்களை வெளியேற்ற முற்பட்டனர்.

இது தொடர்பாக குறித்த கிறிஸ்தவ சபையின் போதகர், பொன்னாலையைச் சேர்ந்த சிவில் சமூக செயற்பாட்டாளர்களான ந.பொன்ராசா மற்றும் செ.ரதீஸ்வரன் ஆகியோருக்கு எதிராக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில், பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் விசாரணை இடம்பெற்றது.

இதன்போது, எவரும் எந்த மதத்தையும் பின்பற்ற உரிமை இருக்கின்றது எனக் கூறிய பொலிஸ் பொறுப்பதிகாரி, மத போதனை செய்தவர்களுடன் முரண்பட்டமை தவறான செயல் என தெரிவித்தார்.

இதன்போது, தமது பிரதேசம் சைவக் கிராமம் என்பதைச் சுட்டிக்காட்டிய சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கிறிஸ்தவ சபைகளின் மதமாற்றச் செயற்பாடுகளை மக்கள் விரும்பவில்லை எனக் கூறினர். மதம் மாற்றும் சபைகளின் செயற்பாடுகளை மக்கள் விரும்பாவிட்டால் உரிய சட்டத்தின் அடிப்படையில் அவர்களின் செயற்பாடுகளை நிறுத்துமாறு பொலிஸ் பொறுப்பதிகாரி அறிவுறுத்தினார். கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளர் போன்றோருக்கு அறிவிப்பதன் மூலம் நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். இதேவேளை, உரிய அனுமதி இன்றி பொன்னாலையில் மதச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டாம் என குறித்த கிறிஸ்தவ சபையின் போதகருக்கு பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சபைக்குரிய அனுமதி இருக்கின்ற போதிலும், பிரதேசங்களில் கிளை நிலையங்களை நடத்துவதாயின் அதற்குரிய அனுமதி மற்றும் இடம் தொடர்பான பதிவுகளைப் பெற்றிருக்க வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார். (ஐ)

# சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள ஆவணம் போலி-ஆனால் நான் அமெரிக்க பிரஜையில்லை

## கோத்தபாய மறுப்பு



(கொழும்பு)
இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தான் அமெரிக்க பிரஜாவுரிமையை துறந்துவிட்டார் எனத் தெரிவிக்கும் விதத்தில் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள ஆவணம் போலியானது என்பதை ஏற்றுக்கொண்டுள்ள அதேவேளை உரிய ஆவணம் தன்னிடம் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உண்மையான ஆவணத்தை ஊடகங்களுடன் பகிர்ந்துகொள்வீர்களா என்ற கேள்விக்கு இல்லை அதற்கான தேவையில்லை எனவும் தேர்தல் ஆணையகம் கேட்கும்போது அவர்களிடம் அதனை கையளிப்பேன் எனவும் அவர் தெரிவித்தார்.

நான் தற்போது இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாக முன்னைய கடவுச்சீட்டை ஒப்படைத்துவிட்டு தற்போது இலங்கை கடவுச்சீட்டை பெற்றிருக்கின்றேன் எனவும் தெரிவித்தார்.

நான் ஒரேயொரு கடவுச்சீட்டிற்கு உரியவனல்ல என்பது குடிவரவு ஆணையாளருக்கு தெரியும். இதன் காரணமாக நான் புதிய இலங்கை கடவுச்சீட்டை பெற்றுள்ளேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்க பிரஜாவுரிமையைத் துறந்துவிட்டார் எனத் தெரிவிக்கும் விதத்தில் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள ஆவணம் போலியானது என ஆங்கில இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தற்காலிகமாக முடிவுக்கு வந்தது வெளிவாரி பட்டதாரிகளின் போராட்டம்





(கொழும்பு)

அரச தொழில் நியமனம் வழங்குமாறு கோரி மட்டக்களப்பு மாவட்ட வெளிவாரிப் பட்டதாரிகளால் முன்னெடுக்கப்பட்ட சுழற்சி முறையிலான சத்தியாக்கிரகப் போராட்டம் தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் நேற்றுப் புதன்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் உடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

வெளிவாரிப் பட்டதாரிகள் குழுவினர் நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசனை அவரது அலுவலகத்தில் சந்தித்து தங்களின் போராட்டத்தின் கோரிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

அதன் பின்னர் பட்டதாரிகளின் கோரிக்கைகள் குறித்து ஆராய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், இவ்விடயம் தொடர்பாக அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அரச அதிபர் மட்டங்களில் தொலைபேசியூடாக கலந்துரையாடி அவர்களின் வெளிப்படுத்தல்களை பட்டதாரிகளுக்குத் தெளிவுபடுத்தினார்.

எனினும் இவ்விடயங்கள் தொடர்பாக பட்டதாரிகளின் சத்தியாக்கிரகம் நடைபெறும் இடத்திற்கு வந்து அனைத்துப் பட்டதாரிகளின் முன்னிலையிலும் தெளிவுபடுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதற்கமைய நேற்று வெளிவாரிப் பட்டதாரிகளின் சத்தியாக்கிரகப் போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன், பட்டதாரிகளின் கோரிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்து தெளிவுபடுத்தினார்.


குறித்த விடயங்களை ஏற்றுக்கொண்ட பட்டதாரிகள், சத்தியாக்கிரகப் போராட்டத்தை தற்காலிகமாக நிறைவுக்கு கொண்டு வந்தனர்.

அரசாங்கத்தால் 16 ஆயிரம் பட்டதாரிகளுக்கான நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில், அந்த நியமனங்களில் வெளிவாரிப் பட்டதாரிகள் எவரும் உள்வாங்கப்படாததைக் கண்டித்தும் வெளிவாரிப் பட்டதாரிகளை உள்வாங்கக் கோரியும் மட்டக்களப்பில் தொடர்ந்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மக்களைத் திசைதிருப்பும் ரத்ன தேரர்

## அசாத் சாலி சாடல்





(கொழும்பு)

ரத்னதேரர் மேற்கொண்டு வந்த அனைத்து இனவாதத் திட்டங்களும் தோல்வியுற்றுள்ள நிலையில் மக்களைத் திசை திருப்பவே அவர் தற்போது முயற்சிப்பதாக மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தெரிவித்தார்.

அத்துடன் அரசாங்கம் 7 நாட்களுக்குள் விலகிக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் மக்களை அணிதிரட்டி அரசாங்கத்துக்கு எதிராக நாடுதழுவிய ரீதியில் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரத்னதேரர் தெரிவித்தார்.

ரத்னதேரர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியலில் இருந்துகொண்டு அந்த கட்சிக்கு எதிராக இவ்வாறு செயற்படுவதற்கு வெட்கப்படவேண்டும். அவர் உண்மையாக செயற்படுபவராக இருந்தால் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட்டே அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் மேற்கொள்ளவேண்டும். அதனால் சிங்கள மக்கள் இதன் பின்னரும் இவரை நம்பி ஏமாறமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார். தேசிய ஐக்கிய முன்னணி கட்சிக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1792

### சித்தார்த்

என் தாயிடம் குடித்த பாலைவிட
உன் தாயிடம் நான் குடித்த பாலே அதிகம்!
உருவத்தில் வேறுபட்டாலும்
நீயும் எனக்கு சகோதரனே!



### அஞ்சனா


இன்பத்தில் சிரிப்பவன் அதிர்ஷ்டசாலி
துன்பத்தில் சிரிப்பவன் ஞானி
கற்பனையில் சிரிப்பவன் கவிஞன்
கண்டவுடன் சிரிப்பவன் காரியவாதி
தெரிந்து சிரிப்பவன் நடிகன்
தெரியாமல் சிரிப்பவன் ஏமாளி
ஓயாமல் சிரிப்பவன் பைத்தியக்காரன்
ஓடவிட்டு சிரிப்பவன் வஞ்சகன்
உட்கார்ந்து சிரிப்பவன் சோம்பேறி
உழைப்பில் சிரிப்பவன் உயர்ந்த மனிதன்

### ரூபினி

பணிவான
சொல்
அன்பான
செயல்
வாழ்க்கைப்
பாதையை
நிச்சயம்
இனிமை
யாக்கும்



### விசாகன்



உண்மையாகப்
பழகுபவர்கள்
வெறுக்கப்
படுகிறார்கள்...
பொய்யாகப்
பழகுபவர்கள்
நம்பப்படு
கிறார்கள்

### வான்மதி

சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்தது அல்ல... அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தது ஆகும்



### நாராயணன்

உயரப் பறக்கவேண்டுமெனில் நிச்சயம் வீசும் காற்றுக்கு எதிர்த்திசையில் பயணம் செய்தேயாக வேண்டும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தீ விபத்தில் முற்றாக எரிந்த வீடு





(நெளுக்குளம்)

வவுனியா சிதம்பரபுரம் கற்குளம் முதலாம் யுனிட் பகுதியில் இடம்பெற்ற தீ விபத்தில் வீடு ஒன்று முற்றிலும் எரிந்து நாசமாகியுள்ளது

தாய் மற்றும் தந்தை வீட்டில் இல்லாத வேளை பிள்ளைகள் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது.

எனினும் தெய்வாதீனமாக எந்த உயிர்ச்சேதமும் ஏற்படாத நிலையில் பிள்ளைகளின் கற்றல் உபகரணங்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளதுடன், குறித்த குடும்பத்தினர் வசிப்பதற்கும் இடமின்றி நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற சிறிரெலோ இளைஞரணி தலைவர் ப. கார்த்தீபன் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டதுடன் தற்காலிக தேவைக்காக ரூபா பத்தாயிரம் பணத்தை வழங்கியிருந்தார்.

சம்பவ இடத்திற்கு சென்ற சிதம் பரபுரம் பொலிஸார் விபத்து தொட ர்பான விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (9-299)

# நல்லாட்சியில் நாம் இழைத்த தவறு விளம்பரப்படுத்தாமையே-அப்புஹாமி



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தை அமைத்த பின்னர் மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்களை மேற்கொண்டிருக்கின்றோம்.

எனினும் அவற்றை மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு ஊடகங்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமையும், எமது அபிவிருத்திப் பணிகளை விளம்பரப்படுத்தாமையுமே நாங்கள் இழைத்த பாரிய தவறாகும். அவற்றை அறிந்துகொள்ளாமையினாலேயே மக்கள் கோபமடையும் நிலையேற்பட்டிருக்கிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி கவலை வெளியிட்டுள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது.

கம்பரெலிய மற்றும் என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா வேலைத் திட்டங்கள் ஊடாக சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு கடனுதவி வழங்கல், மீனவர்களுக்கு விசேட உதவித்திட்டம், வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல், நீர்வழங்கல் வசதி, வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகளை எமது அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஊடாக மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு அபிவிருத்திச் செயற்றிட்டங்களையும் மேற்கொண்டுள்ளோம்.

எனினும் அவற்றை மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு ஊடகங்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமையும், எமது அபிவிருத்திப் பணிகளை விளம்பரப்படுத்தாமையுமே நாங்கள் இழைத்த பாரிய தவறாகும் என மேலும் அவர் கவலை வெளியிட்டார். (ஜ)

# பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முஸ்லிம் சம்மேளனம் 5 மில்லியன் டொலர் உதவி

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உதவும் வகையில் 5 மில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேச முஸ்லிம் சம்மேளனம் இலங்கைக்கு வழங்கியது.



நேற்று முன்தினம் கொழும்பு தாமரைத் தடாகத்தில் இடம் பெற்ற மாநாட்டில் இந்த நிதி வழங்கப்பட்டது.

சர்வதேச முஸ்லிம் சம்மேளனத்தின் பொதுச் செயலாளரும் சர்வதேச முஸ்லிம் அறிஞர்கள் சங்கத்தின் தலைவருமான கலாநிதி மொஹமட் பின் அப்துல் கரீம் அல்இஸா இந்த நிதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தார்.

சர்வதேச முஸ்லிம் சம்மேளனத்தால் நேற்று முன்தினம் கொழும்பில் சமாதானம் மற்றும் சகவாழ்வு என்பவற்றுக்கான சர்வதேச மாநாடு நடத்தப்பட்டது. இதில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் மகாநாயக்க தேரர்கள் உட்பட மகா சங்கத்தினர், ஏனைய சமயத் தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும்பாராளுமன்ற உறுப்பினர்கள் புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# செய்தித்துளிகள்

## கடமைகளைப் பொறுப்பேற்றார் பிரதியமைச்சர் அப்துல்லா மகரூப்



(கொழும்பு)

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை பிரதியமைச்சராக ஜனாதிபதி முன்னிலையில் நேற்று முன்தினம் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட அப்துல்லா மகரூப் கொழும்பிலுள்ள பிரதியமைச்சர் அலுவலகத்தில் வைத்து தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார். (இ-7)

## விமானப்படை வீரர் சுட்டுத் தற்கொலை

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 80/1 தேஸ்டன வீதி, கொழும்பு -3 என்னும் முகவரியில் அமைந்துள்ள சுவிட்சர்லாந்து தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு அருகில் நேற்று பிற்பகல் 1.15 மணியளவில் கடமையில் ஈடுபட்டிருந்த விமானப்படை வீரர் தனது கடமைத் துப்பாக்கியின் மூலம் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த இராணுவ வீரர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். (ஜ)

## தேசிய கலை இலக்கியப் பேரவையின் யாழ்ப்பாண பிரதேச மாநாடு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் யாழ்ப்பாணப் பிரதேசப் பேரவை மாநாடும் உறுப்பினர் இணைவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறும். தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும், தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான க.தணிகாசலம் தலைமையில் இடம்பெறவுள்ள இம் மாநாட்டில் மக்கள் கலை இலக்கியச் செயற்பாட்டில் இணைந்து இயங்க விரும்புகின்ற எழுத்தாளர்கள், கலைஞர்கள், கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் பங்கு பற்றலாம் என இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஜ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | கொடிகாமம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 50 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 240 | 300 |
| தக்காளி | 100 | 80 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 130 | 160 | 100 |
| கோவா | 100 | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 140 | 200 |
| பூசணி | 100 | 60 | 60 | 80 |
| புடோல் | 80 | 70 | 80 | 120 |
| வாழைக்காய் | 140 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 120 | 120 |
| பாகற்காய் | 300 | 380 | 240 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 70 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 100 | 100 |
| பயற்றங்காய் | 300 | 380 | 200 | 240 |
| லீக்ஸ் | 120 | 70 | 80 | 100 |
| பீற்றூட் | 100 | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 300 | 200 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 100 | 50 | 100 | 80 |
| போஞ்சி | 250 | 200 | 240 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 40 | 60 | 60 |
| கீரை=1பிடி | 50 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 300 | 260 | 240 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 25 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 250 | 140 | 240 | 200 |
| வெங்காயப்பூ | 240 | 150 | 160 | 200 |
| முள்ளங்கி | 50 | 40 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 20 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 130 | 50 | 60 |




# விக்கிரமாதித்தனும் இந்திரனும்



ஒரு முறை விசுவாமித்திர முனிவர் கடுமையான தவம் செய்து கொண்டிருந்தார். அவருடைய தவம் முற்றுப் பெற்றால் இந்திரனுடைய பதவிக்கே ஆபத்து வந்துவிடும். இதை இந்திரன் விரும்பவில்லை. தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பினான். இதற்காகத் தனது சபையில் நடன மாதர்களாக உள்ள ரம்பை, ஊர்வசி இருவரையும் வரவழைத்தான். இருவரில் ஒருவரை அனுப்பி முனிவரின் தவத்தைக் கலைத்து வருமாறு செய்ய நினைத்தான்.

இருவரில் யாரை அனுப்புவது என்று இந்திரனுக்குப் புரியவில்லை. செய்தி அறிந்த இருவரும் தாங்களே செல்வதாகப் போட்டியிட்டனர். "ஒருவர் மட்டும் தான் செல்ல வேண்டும். உங்களில் யாரை அனுப்பலாமென்று நீங்களே கூறி விடுங்கள்" என்றான் இந்திரன்.

"நடனக் கலையில் எனக்கு ஈடு இணை எவருமே கிடையாது. எனவே, நான் தான் பூலோகத்திற்குச் செல்வேன்" என்று ரம்பை கூறினாள்.

"ரம்பை நடனக்கலை ஒன்றில்தான் சிறந்தவள். நான் சகல கலைகளிலும் சிறந்தவள் என்பதைத் தாங்களே அறிவீர்கள். அவ்வாறு இருக்கையில் என்னை விடத் தகுதி பெற்றவர் வேறு எவர் இருக்கக்கூடும்" என்றாள் ஊர்வசி.

இருவருடைய பேச்சையும் கேட்ட இந்திரனுக்கு ஒன்றுமே புரியவில்லை. இருவரில் எவர் சிறந்தவர் என்று தீர்மானிக்க அவனால் முடியவில்[illegible] சமயத்தில் நாரதர் அவ்[illegible]ம் வந்தார். இந்திரன் அவரை வரவேற்று உபசரித்தான்.

"இந்திரதேவா, ஏன் வருத்தமுற்று இருக்கிறாய்?" என்று கேட்டார் நாரதர். "ஐயனே! விசுவாமித்திர முனிவர் கடும் தவம் இயற்றிக் கொண்டிருக்கிறார். அவரது தவத்தைக் கலைக்க எனது நடன மாதர்களில் ஒருவரை அனுப்ப நினைத்தேன். அதற்காக இவர்கள் இருவரையும் வரவழைத்தேன். ஆனால், இப்பொழுது இவர்களில் யாரைப் பூலோகத்திற்கு அனுப்புவது என்று புரியவில்லை..." என்றான் இந்திரன்.

"இரண்டு பேரையும் உனது சபையில் நடனமாடச் செய்து சிறப்பாக எவள் நடனமாடுகிறாளோ அவளையே பூலோகத்திற்கு அனுப்பிவிடு..." என்றார் நாரத முனிவர். மறுநாள் இந்திர சபையில் ரம்பை, ஊர்வசி ஆகிய இருவரின் நடன நிகழ்ச்சி நடந்தது. நடனத்தைக் காண தேவர்களும் சகல கலைகளையும் உணர்ந்த கலைவாணர்களும் சபையில் குழுமியிருந்தனர்.

நடனம் ஆரம்பம் ஆயிற்று. இருவரும் சளைக்காமல் ஆடினர். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கவில்லை. இருவருமே சிறப்பாக நடனம் ஆடினர். ஒருவருடைய நடனத்திலும் குற்றம் குறை சொல்ல முடியவில்லை. இருவருமே சரிசமமாக ஆடினர். இருவருடைய நடனத்தில் எவருடைய நடனம் சிறந்தது என்று தீர்ப்புச் சொல்ல முடியாமல் அனைவரும் குழம்பினர்.

இச்சமயத்தில் நாரத முனிவர் எழுந்து, "இந்திரனே, இங்குள்ள எவராலும் முடியாத காரியத்தைச் செய்யக்கூடிய ஒருவன் பூலோகத்தில் வசிக்கிறான். அவன் பெயர் விக்கிரமாதித்தன். உஜ்ஜயினி மாகாளிப்பட்டணத்தை ஆண்டு சகல கலைகளையும் உணர்ந்தவன் விக்கிரமாதித்தன். சிறப்பாக நாட்டியக் கலையில் தேர்ச்சி பெற்றவன். அவனை இங்கு அழைத்து வரச் செய்தால் அவன் ரம்பை, ஊர்வசி ஆகிய இருவரில் எவர் சிறந்தவர் என்பதைக் கூறி விடுவான்" என்றார்.

உடனே இந்திரன் தனது தேரோட்டியான மாதிரியை அழைத்து, "மாதிரி, உஜ்ஜயினி மாகாளிப்பட்டணத்திற்குச் சென்று உடனே விக்கிரமாதித்தனை இங்கு அழைத்து வா!" என்றான். மாதிரிக்கு விக்கிரமாதித்தனை இந்திரலோகத்திற்கு அழைத்துவர விருப்பமில்லை. "ஒரு மானிடன் இந்திர லோகத்திற்கு வருவதா?" என்று நினைத்தான்.

இதை அறிந்து கொண்ட நாரதமுனிவர், "மாதிரி, விக்கிரமாதித்தனை அவ்வளவு சாதாரணமாக நினைத்துக் கொள்ளாதே! தேவர்களுக்கெல்லாம் மேலாக விளங்கக் கூடியவன். இங்கு எழுந்துள்ள சிக்கலான பிரச்சினையைத் தீர்த்து வைக்கக் கூடியவன் அவன் ஒருவனே. எனவே, தாமதம் செய்யாமல் அவனை இங்கு அழைத்து வா" என்றார்.

மாதிரியும் அரை மனதுடன் பூலோகத்திற்குச் சென்றான். விக்கிரமாதித்தனைக் கண்டு இந்திரன் அவனை அழைத்து வருமாறு கூறினான். விக்கிரமாதித்தன் நேரே காளிகோயிலுக்குச் சென்றான். காளியிடம் எலுமிச்சம் பழமும் திருநீறும் ஆசியும் பெற்று இந்திரலோகம் செல்லக் கிளம்பினான். தேவலோகத்திலிருந்து வந்த விமானத்தில் ஏறுவதற்காக விக்கிரமாதித்தன் தமது வலது காலை எடுத்து வைத்தான்.

இடது கால் தரையில் இருந்தது. அச்சமயத்தில் மாதிரி, "இந்த மானிடன் இந்திரலோகத்திற்கு வருவதா?" என்ற எண்ணத்துடன் விமானத்தைத் திடீரென்று கிளப்பினான். இதை அறிந்து கொண்ட விக்கிரமாதித்தன் தமது வலது காலின் பெருவிரலைத் தேர்த் தட்டில் அழுத்தமாக ஊன்றினான். மாதிரி எவ்வளவு முயற்சி செய்தும் விமானத்தை அவனால் மேலே கிளப்ப முடியவில்லை.

உடனே மாதிரி விக்கிரமாதித்தனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பின்னர் விமானம் தேவலோகம் நோக்கிச் சென்றது. இந்திரன் விக்கிரமாதித்தனை எதிர் கொண்டழைத்தான். தங்க ஆசனம் கொடுத்து அமரச் செய்தான். பிறகு விக்கிரமாதித்தனிடம் எல்லாச் செய்தியையும் கூறி அவனிடம் ஒரு பாரிஜாத மாலையைக் கொடுத்தான்.

"விக்கிரமாதித்தரே! ரம்பை, ஊர்வசி இருவரில் எவர் சிறப்பாக நடனமாடுகிறாரோ அவருக்கு இந்த மாலையை அணிவியுங்கள்" என்றான் இந்திரன். போட்டி ஆரம்பமாகியது. இருவரும் முன் போலவே ஒருவருக்கு ஒருவர் சளைக்காமல் ஆடினர். விக்கிரமாதித்தனுக்கு யாரைத் தேர்ந்தெடுப்பது என்றே புரியவில்லை.

போட்டி முடிவுற்ற பிறகு, "தேவேந்திரா, இருவரும் தனித்தனியாக ஆடினர். எனவே, இவர்களில் எவர் சிறப்பாக ஆடினர் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நாளைய தினம் இருவரையும் சேர்ந்தாற்போல் ஆடச் செய்யுங்கள். அதைப் பார்த்த பிறகு என்னுடைய தீர்ப்பை வழங்குகிறேன்" என்றான் விக்கிரமாதித்தன்.

மறுநாள் காலையில் விக்கிரமாதித்தன் நந்தவனத்திற்குச் சென்றான். அங்கு மலர்களைப் பறித்தான். அவைகளை இரண்டு பூச்செண்டுகளாகக் கட்டினான். உள்ளே நிறைய வண்டுகளைத் திணித்து வைத்துக் கட்டினான். இரவு நடன நிகழ்ச்சி நடக்கும் போது, தான் தயாரித்து வைத்திருந்த பூச்செண்டுகளுடன் சபைக்குச் சென்றார். நடனம் ஆரம்பமாவதற்கு முன், "வெறுங்கையுடன் ஆடினால் அழகாக இராது. இந்தப் பூச்செண்டுகளைப் பிடித்துக் கொண்டு ஆடினால் அழகாக இருக்கும்" என்று கூறிய விக்கிரமாதித்தன் இருவரிடமும் ஆளுக்கொரு பூச்செண்டைக் கொடுத்தான்.

ரம்பையும் ஊர்வசியும் விக்கிரமாதித்தன் கொடுத்த பூச்செண்டுகளுடன் ஆட ஆரம்பித்தனர். நேரம் செல்லச் செல்ல ரம்பை தன்னை மறந்தாள். கையில் பிடித்திருந்த பூச்செண்டை அழுத்திப் பிடித்தவாறு வெறியுடன் ஆடிக் கொண்டிருந்தாள். பூச்செண்டை அவள் அழுத்திப் பிடித்ததால் அதற்குள்ளிருந்த வண்டுகள் அவள் கையைக் கொட்டத் தொடங்கின. வலி தாங்காத ரம்பை ஆட்டத்தை மறந்தாள். தாறுமாறாக, ஆட ஆரம்பித்தாள். தாளம் தவறி ஆட ஆரம்பித்தாள்.

ஆனால், ஊர்வசி நிதானமாக ஆடியதால் பூச்செண்டை மென்மையாகக் கையில் பிடித்துக் கொண்டிருந்தாள். இதனால் வண்டுகள் அவளை ஒன்றும் செய்யவில்லை. தாளத்துக்குத் தக்கவாறு அவள் ஆடினாள். இதிலிருந்து ஊர்வசியே சிறப்பாக நடனமாடினாள் என்று தீர்ப்பு வழங்கிய விக்கிரமாதித்தன், இந்திரன் அளித்த பாரிஜாத மாலையை அவளுக்கு அணிவித்தான்.

விக்கிரமாதித்தனின் தீர்ப்பைக் கண்டு வியந்த இந்திரன் அவரைப் பாராட்டினான். தான் இந்திரப் பட்டம் ஏறிய பொழுது பரமேஸ்வரனால் அவனுக்குப் பரிசாக அளிக்கப்பட்ட தங்க சிம்மாசனத்தை விக்கிரமாதித்தனுக்குப் பரிசாக அளித்தான். அழகுமிகுந்த அந்த சிம்மாசனத்திற்கு முப்பத்தி இரண்டு படிகள் இருந்தன.

ஒவ்வொரு படியிலும் ஓர் அழகிய பதுமை இருந்தது. சிம்மாசனத்தில் ஏறுவதானால் ஒவ்வொரு பதுமையின் தலைமீது கால்வைத்துத் தான் ஏறவேண்டும். இந்த சிம்மாசனத்தை விக்கிரமாதித்தனுக்குப் பரிசாக அளித்த இந்திரன், "இந்த சிம்மாசனத்தில் இருந்தவாறே ஆயிரம் ஆண்டுகாலம் சிறப்பாக ஆட்சி செய்து வருவாயாக" என்று வரமும்அளித்தான். இரத்தினமயமான அந்த சிம்மாசனத்துடன் விக்கிரமாதித்தன் உஜ்ஜயினி மாகாளிப்பட்டணத்தை அடைந்தான்.

## விடுகதைகளும் விடைகளும்

• கறுப்பன் வயதானால் வெளுத்துவிடுவான். அவன் யார்?

**தலைமுடி**

• நெருப்பில் வெந்தவனுக்கு நீண்ட ஆயுள். அவன் யார்?

**செங்கல்**

• அவனைக் கண்டால் அஞ்சுவார்கள், ஆதிசேஷனாய் வணங்குவார்கள். அவன் யார்?

**பாம்பு**

• சட்டையை கழற்றினால் சாப்பாடு தயார். அது என்ன?

**வாழைப்பழம்**

• பகலெல்லாம் அண்ணன் நம்முடன் இருப்பான். இரவில் தம்பி நம்முடன் வருவான். அவர்கள் யார்?

**சூரியன், சந்திரன்**

## வாழ்க்கைத் தத்துவங்கள்

• மௌனத்தில் வார்த்தைகளையும், கோபத்தில் அன்பையும் உணர்ந்துகொள்வது தான் உறவு. புரிதல் இருந்தால் பிரிதல் இல்லை.

• உரிமை இல்லாத உறவும் உண்மை இல்லாத அன்பும் நேர்மை இல்லாத நட்பும் நம்பிக்கை இல்லாத வாழ்க்கையும் என்றும் நிரந்தரமில்லை.

• ஒருவரின் அருமையை அவர்களை பிரியும் தருணத்தில் மட்டுமே உணரமுடியும் நினைவுகளின் துணையோடு.

• ஒருவரை இழக்கும் போது வரும் கண்ணீரைவிட, அவர்களை இழக்கக்கூடாது என்று நினைக்கும்போது வரும் கண்ணீருக்கு இன்னும் வலி அதிகம்.

முதலில் தன்னை மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்பவன் மட்டுமே, உலகை மாற்றத் தகுதி உடையவன். – நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அனைத்து இந்து சமய அமைப்புகளும் ஒன்றாக இணைந்து போராட வேண்டும்

இலங்கையில் இந்து சமயத்துக்கு ஏற்பட்டு வரும் நிட்டூரம் கொஞ்சமல்ல. ஆனாலும் அது பற்றி பலமாகக் குரல் கொடுப்பதற்கு இந்து சமய அமைப்பிலும் தமிழ் அரசியலிலும் ஆட்கள் இல்லை என்ற உண்மையை நாம் ஏற்றுத் தானாக வேண்டும்.

இதன் காரணமாக இந்து சமயத்தின் வரலாற்றுத் தொன்மையை இழந்து போகின்றோம்.

இந்து சமயம் நிந்திக்கப்படுவது கண்டு இதயம் குமுறுகின்ற சமயத் தலைவர்கள் இருக்கின்றனராயினும் அவர்களுக்கான நம் ஆதரவு போதாது என்பதுதான் உண்மை.

அண்மையில் திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் தென்கயிலை ஆதீன சுவாமிகள் மீது சுடுநீர் ஊற்றப்பட்டது. இதற்குக் கண்டனம் தெரிவித்து நல்லூர் கைலாச பிள்ளையார் கோவில் முன்றலில் அகிம்சை வழிப் போராட்டம் நடைபெற்றது.

பகிரங்கமான அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அதில் பங்குகொண்டவர்களின் எண்ணிக்கை போதுமானதல்ல என்பதைக் கூறித் தானாக வேண்டும்.

தவிர, முக்கியமான சில இந்து அமைப்புக்களும் அதில் கலந்து கொள்ளவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்க விடயம்.

இதற்கு மேலாக, மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தில், நுழைவாயில் வளைவு அமைப்பது தொடர்பில் ஏற்பட்ட தடைகள் குறித்து ஆராய்வதற்காக கடந்த ஜுலை மாதம் 20ஆம் திகதி இந்துமாமன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் இந்துமாமன்றத்தின் பிராந்திய அலுவலகத்தில் இந்து மதத் தலைவர்கள் உள்ளிட்ட இந்து அமைப்புகளினது பிரதிநிதிகள், ஆலய பரிபாலன சபையினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

உணர்வுபூர்வமாக நடந்த இந்தக் கூட்டத்தில் மன்னாரில் இருந்தும் ஏனைய மாவட்டங்களில் இருந்தும் பலர் பங்கேற்றனர்.

ஆனாலும் இந்தக் கூட்டத்திலும் கலந்து கொள்ளாத சில இந்து அமைப்புகள் இருக்கவே செய்கின்றன.

ஓர் எதிர்ப்பு நடவடிக்கையைச் செய்யும் போது அதில் ஒன்றுபட்டு ஒற்றுமையாகச் செய்வதே சிறப்பானது. அது கனதியாகவும் இருக்கும்.

இதைவிடுத்து அவரவர் தத்தம் கடன் கழிப்புக்காக எதிர்ப்புப் போராட்டத்தை நடத்துவதென்பது இந்து மதத்துக்கு ஆரோக்கியமானதல்ல என்பதை சம்பந்தப்பட்ட இந்து அமைப்புகள் சிந்தித்தாக வேண்டும்.

துண்டம் துண்டமாக கூட்டம் நடத்துவது, துண்டம் துண்டமாக எதிர்ப்புப் போராட்டம் செய்வதானது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

இவை யாவற்றுக்கும் மேலாக, இந்து சமயத்துக்கு நடக்கின்ற நாசகாரத்தை எதிர்க்கின்ற விடயத்தில் அரசியல் கலக்குமாக இருந்தால், அஃது ஒற்றுமைப்படும் இந்து சமயத்தை உடைப்பதற்கான மிகப் பெரும் இராஜதந்திரம் என்பதைப் புரிந்து கொள்வது கட்டாயமானது.

# பகலில் மைத்திரிக்கு ஆதரவு இரவில் சஜித்துக்கு ஆதரவு

## தயாசிறியை கடுமையாகச் சாடிய டிலான்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டுமென கூறி வருகின்ற சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மறுபுறம் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு வழங்கும் போக்கை கடைப் பிடிக்கின்றனர். பகலில் மைத்திரிபால சிறிசேன வேண்டும் என்று கூறுபவர்கள் இரவில் சஜித்திற்கு ஆதரவு வழங்கும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர் என்றும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா விமர்சித்தார்.

எங்கிருந்தோ வந்தவர்கள் இன்று எமது சுதந்திரக் கட்சியை நிர்வகிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் நாங்கள் எப்போதுமே ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராகவே இருப்போம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக இருக்கின்ற பட்சத்திலேயே இந்த நாட்டின் அரசியலில் ஒரு முக்கிய வகிபாகத்தை வகிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா சுதந்திரக்கட்சியில் இருந்து கொண்டு பொதுஜன பெரமுனவிற்கு சார்பாக செயற்பட்டு வருகின்றார் என்றும் அவர் அவ்வாறு தொடர்ந்து செயற்பட்டால் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும் என்றும் சுதந்திரக்கட்சியின் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தமை தொடர்பில் வினவியபோதே டிலான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியை எதிர்த்து எந்த வேட்பாளர் போட்டியிட்டாலும் அவரை நாங்கள் ஆதரிக்க வேண்டிய சூழல் ஏற்படும். எமக்கு வேறு வழியில்லை. கோத்தபாய ராஜபக்ஷதான் எதிர்த்தரப்பு வேட்பாளர் என்று தீர்மானிக்கப்பட்டால் நாம் அவரை ஆதரிக்கவேண்டி வரும். ஆனால் அப்படியாகும் சந்தர்ப்பத்தில் கோத்தபாய ராஜபக்ஷ இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் சுதந்திரக்கட்சியின் கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொண்டால் நாங்கள் அவருக்கு ஆதரவு அளிப்போம். வாசுதேவ நாணயக்கார போன்றவர்களும் இந்த நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர்.

எனினும் இன்று சுதந்திரக்கட்சியில் எமக்கு எதிராக சிலர் பேசிக்கொண்டிருக்கின்றனர். என்னைப் பொறுத்தவரையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எப்போதும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரானதாகவே இருக்க வேண்டும். சுதந்திரக்கட்சி ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிரானதாக செயற்பட்டால் நாம் அந்தக் கட்சியில் நீடிப்போம். அல்லது ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக போகின்ற வேறொரு கட்சியில் நாங்கள் இணைய வேண்டிய தேவை ஏற்படும்.

ஒருகாலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் சஜித் பிரேமதாஸ அணியாக இருந்தவர்கள் இன்று ஜனாதிபதியைச் சுற்றி இருக்கின்றனர். அவர்கள் மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சியின் பக்கம் சுதந்திரக்கட்சியை இழுத்து செல்லவே முயற்சிக்கின்றனர். அதாவது சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் போக்கில் ஜனாதிபதியைச் சுற்றியிருக்கும் இந்த பிரமுகர்கள் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று கூறும முக்கியஸ்தர்கள் மறுபுறம் சஜித் பிரேமதாஸவிற்கு மறைமுகமாக ஆதரவு வெளியிட்டு வருகின்றனர்.

அதற்கு நாம் இடமளிக்க மாட்டோம். இதனை நாங்கள் கண்டுபிடித்து விட்டோம். அதனால் தான் எமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிக்கை விடுக்கின்றனர். எங்கிருந்தோ வந்தவர்கள் எமது கட்சியை நிர்வகிக்க ஆரம்பித்துவிட்டனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 48 நாடுகளுக்கு கட்டணமற்ற விசாக்களை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், சிங்கப்பூர் உள்ளிட்ட 48 நாடுகளுக்கு கட்டணமற்ற விசாக்களைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கைகள் இன்று முதல் அமுல்படுத்தப்படும் என்றும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சகல நாடுகளுக்கும் எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு கட்டணமற்ற முறையில் விசாக்களை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும் என்று சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரிமாளிகையில் இடம் பெற்றது.

அமைச்சர் ஜோன் அமரதுங்க,அமைச்சின் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் அலுவிஹார உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொணட னர்.

வெளிநாட்டு தூதுவர்களும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

மேற்குறிப்பிடப்பட்ட நாடுகளுடன் ஆஸ்திரியா, அவுஸ்திரேலியா, பெல்ஜியம், பெல்காரியா, கனடா, கம்போடியா, சீனா, கொராடியா, சைப்ரஸ், டென்மார்க், எஸ்டோனியா, பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, க்றீஸ், ஹங்கேரி, இந்தோனேசியா, ஐஸ்லாந்து, அயர்லாந்து, இஸ்ரேல், இத்தாலி, லாட்வியா, லிதுஹானியா, லக்ஸம்பேர்க்ஆகிய நாடுகளும உள்வாங்கப்பட் டுள்ளன.

மேலும் மலேசியா, மல்டா, நெதர்லாந்து, நியூசிலாந்து, நோர்வே, பிலிப்பைன்ஸ், போலந்து, போர்த்துக்கல், ரோமானியா, ரஷ்யா, சிங்கப்பூர், தென்கொரியா, ஸ்லோவானியா, ஸ்பெயின், சுவீடன், சுவிட்ஸர்லாந்து, தாய்லாந்து , செக் குடியரசு, ஸ்லொவொக் குடியரசு மற்றும் உக்ரைன் ஆகிய 48 நாடுகளுக்கே இவ்வாறு கட்டணமற்ற விசாக்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிலையில் குறித்த நாடுகளுக்கான விசாக்களை இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக www.eta.lk என்ற இணையத்தளத்தினூடாக விசாக்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளவும் முடியும். (ஐ)

## குற்றவியல் நிதித்தொகுப்பு சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

அடிப்படை யாப்பை ஒன்றிணைத்தல் குற்றவியல் நிதி தொகுப்புச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆரம்ப காலப் பகுதியில் விதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டுள்ள குற்றவியல் நிதிதொகுப்பு சட்டத்தில் சில சொற்கள் மற்றும் பயனபாடு 1972 ஆம் ஆண்டு குடியரசு அரசியல் யாப்பில் நிறைவேற்றப்பட்ட பின்னரும் இன்று பொருத்தமற்றதாக அமைந்துள்ளது.

இவ்வாறு காலம் கடந்த சில சொற்கள் மட்டும் பயன்பாட்டிற்காக பொருத்தமான சொற்கள் மற்றும் பயன படுத்துவதற்கு மாற்றீடாக மேற்கொள்ள சட்ட திருத்த வரைவு பிரிவினால் தயாரிக்கப்பட்டுள்ள திருத்த சட்ட மூலத்தை அரசாங்கத்தின் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் அனுமதிக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## உதைபந்தாட்டப் போட்டியும் மைதானத் திறப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக்கழகம் நடததும் மின்னொளி உதைபந்தாட்ட இறுதிப் போட்டியும் மைதானத்திறப்பு விழாவும் விளையாட்டு அரங்கத் திறப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராகப் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்,சிறப்பு விருந்தினராக வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச செயலர் ஈ.தயாரூபன் மற்றும் அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனப் பிரதிச் செயலர் அ.அருளானந்தசோதி மற்றும் அகில இலங்கை உதைபந்தாட்ட நிறைவேற்றுக்குழு உறுப்பினர் டி.எம் வேதாபரணம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில் விளாத்தியடி, மருதனார் மடம், அங்கிலிப்பாய், உரும்பிராய், குமரக் கோட்டம் இணுவில், கோண்டாவில் செல்வநாயகபுரம், திரு நெல்வேலி ஒரு பகுதி, இராஜவீதி, கோப்பாய், கிருஷ்ணன்கோவிலடி, கலைவாணி திருநெல்வேலி, கோப்பாய் கல்வியியற் கல்லூரி, கோப்பாய் இராணுவ முகாம், இராஜேஸ் வரி மண்டபம், பல்கலைக்கழக விடுதி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# திசைமாறும் இளைஞர் மத்தியில் இளைஞரை ஒன்று திரட்டி நடத்தும் இந்த விளையாட்டு சிறப்பானதாகும்



## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் புகழாரம்





அராலி தெற்கு களவத்துறை விளையாட்டுக்கழகத்தின் 72 ஆவது ஆண்டு விழா கழக மைதானத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரன் கலந்து சிறப் பித்தார்.

இங்கு கருத்துரைத்த நாடா ளுமன்ற உறுப்பினர் தமிழர் களுடைய பண்பாட்டியலை, வீரத்தினை எடுத்துச் செல்கின்ற வகையில் அடுத்த தலைமுறை க்கு கடத்திச்செல்கின்ற வகையில் களவத்துறை விளையாட்டுக் கழகம் நடத்தும் இந்த விளை யாட்டுப் போட்டி மிக சிறப்பானது. இளைஞர்கள் தடம் மாறிப் போகும் காலப்பகுதியில் இந்த கிராமத்தினுடைய இளைஞர் களை ஒன்று திரட்டி அவர்களை மிகச்சிறந்த வகையில் பயிற்று வித்து அவர்களைச் சிறந்த பண் போடு வளர்க்கின்ற இந்த கிரா மத்தினுடைய களவத்துறை விளையாட்டுக்கழகம் நடத்தும் இந்தப் போட்டி இனிய கழகங் களுக்கு முன்னுதாரணமாக இருக்கிறது. 72 ஆண்டுகளாக இந்த ஆடி விழாவை நடத்து கின்ற இந்த விளையாட்டுக் கழகத்தின் செயற்பாடுகள் பாராட் டப்பட வேண்டியவை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் குறிப் பிட்டார்.

குறித்த நிகழ்வு கழகத்தலை வர் நா.கரிகரனுடைய தலை மையில் இடம்பெற்றது. இந் நிகழ் வில் வலி.மேற்கு பிரதேச சபை யின் தவிசாளர் நடனேந்திரன் மற்றும் மாணவர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தீருவில் அணியை வீழ்த்தி சம்பியனாகியது நேதாஜி அணி



வல்வை றெஜின்போ ஆண்கள் கரப்பந்து சம்பியனை நேதாஜி விளையாட்டுக்கழக ஆண்கள் அணி சுவீகரித் தது.

வல்வை றெஜின்போ விளை யாட்டுக் கழகம் 76 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய வல்வைக்குட்பட்ட கழகங்களுக் கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டியில் நேதாஜி எதிர் தீருவில் ஆண் அணிகள் மோதின.

இறுதியில் நேதாஜி ஆண்கள் அணி வெற்றி பெற்றது. (க)

# பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் உதயசூரியன் அணி மகுடம்



வல்வை றெஜின்போ பெண் கள் வலைப்பந்து சம்பியனை உதயசூரியன் விளையாட்டுக் கழக பெண்கள் அணி தட்டிச் சென்றது.

வல்வை றெஜின்போ விளை யாட்டுக்கழகம் 76 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய வல்வைக்குட்பட்ட கழகங்க ளுக்கிடையிலான வலைப்பந்தா ட்டத் தொடரின் இறுதிப்போட்டி யில் உதயசூரியன் எதிர் சைனிங்ஸ் பெண் அணிகள் மோதின.

இறுதியில் உதயசூரியன் பெண்கள் அணி 10:06 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (க)

## ஆசிய நாடுகளுக்கிடையிலான கரப்பந்தாட்டம் நடுவராக சுதேஸ்குமார் மியன்மார் பயணம்



மியன்மார் நாட்டில் எதிர்வரும் 3 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஆசிய நாடுகளுக்கிடையிலான 23 வயதுக்குட்பட்ட ஆண்களுக் கான கரப்பந்தாட்டப் போட்டிக்கு மத்தியஸ்தராக யாழ்.அரியாலை யிலிருந்து நல்லையா சுதேஸ் குமார் பணியாற்றவுள்ளார்.

இவர் இலங்கையில் உள்ள ஆறு சர்வதேச கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களில் ஒரேயொரு தமிழ் மத்தியஸ்தர் ஆவார். (க)

# கரவெட்டி இளைஞர்களின் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி


கரவெட்டி இளைஞர்களின் ஏற்பாட்டில் மாபெரும் மாட்டு வண்டி சவாரிப்போட்டி எதிர்வ ரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கரவெட்டி சோனப்பு சவாரித்திடலில் இடம் பெறவுள்ளது.

ஒவ்வொரு குழுக்களிலும் வெற்றி பெறும் முதல் 4 இடங் களைப் பெறும் போட்டியாளருக்கு பெறுமதி மிக்க பரிசுகள் வழ ங்கப்படும்.

ஒவ்வொரு குழுவிலும் முத லாம் இடத்தை பெறும் போட்டி யாளருக்கும் துவிச்சக்கர வண்டி யும் பரிசாக வழங்கப்ப டும்.

அத்தோடு ABCD ஆகிய குழு விலும் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் இடங்களைப் பெறும் போட்டியா ளருக்குப் பெறுமதி மிகு பரிசுக ளும் வழங்கி வைக்கப்படுமென போட்டி ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார். (க)

# துஷ்யந்தன் அதிரடிக் கோல்; இறுதிக்குத் தெரிவானது சைனிங்ஸ்



வல்வை விளையாட்டுக் கழக மாலுமிகள் நடத்தும் வல் வைக்குட்பட்ட கழகங்களிடை யே பூரன பெருவிளையாட்டுத் தொடரின் ஓர் அங்கமான 35 வயதுக்கு மேற்பட்டோருக்கான 7 நபர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரின் போட்டி யொன்றில் றெஜி ன்போ அணி சைனிங்ஸ் அணி யுடன் மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட் டியின் முடிவில் சைனிங்ஸ் அணி துஷ்யந்தனின் கோல் மூலம் 1:0 என வெற்றி பெற்றது.

சைனிங்ஸ் சார்பாக அசத்த லாக கோல் காப்பினை மேற் கொண்ட விஜியேந்திரன் ஆட்ட நாயகன் விருதினை வென் றார். (க)

## அவசரகால சட்ட...

உறுப்பினர் சி.சிறீதரன் வாக்கெடுப்பை கோரினார்.

அவசரகால சட்டத்திற்கு ஆதரவாக ஐக்கிய தேசியக்கட்சி, இலங்கை சுதந்திரக் கட்சி, கூட்டு எதிர்க்கட்சி என்பன வாக்களித்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தரப்பில் சி.சிறீதரன், செல்வம் அடைக்கல நாதன் ஆகியோரே சபையில் இருந்தனர். அவர்கள் இருவரும் எதிர்த்து வாக்களித்தனர். ஜே.வி.பி தரப்பில் யாரும் சபையில் இருக்க வில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜூலை 22ஆம் திகதி மூன்றாவது முறையாக அவசரகால சட்டத்தை நீடிக்கும் வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டார். (ம-3)

## போதையில் ஏற்...

செய்தார் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவருவதாவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கிளிநொச்சி ஜெயந்தி நகரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தாயும் மகனும் வெட்டுக்காயங்களுடன் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டனர்.

ஜெயந்தி நகரைச் சேர்ந்த விஷ்ணுகாந்தி வள்ளியம்மை (வயது-70). அவரது மகனான விஷ்ணுகாந்தி லிங்கேஸ்வரன் (வயது-34) ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவரும் நானும் சேர்ந்து சம்பவ தினத்தன்று (திங்கட்கிழமை இரவு) மது அருந்தினோம். அப்போது எங்கள் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அதனால் இரும்புக் கம்பியால் அவரைத் தாக்கினேன். அவர் மயங்கிச் சரிந்தார்.

அவரைத் தாக்கியதை அவரது தாயார் கண்டுவிட்டார். அதனால் தாயாரையும் தாக்கி கத்தியால் வெட்டிக் கொன்றேன். மகன் தப்பிவிடுவார் என்று அவரையும் கத்தியால் வெட்டிக் கொலை செய்தேன் என்று சந்தேகநபரான உதயன் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கினார்.

சந்தேகநபர் கொலைக்குப் பயன்படுத்திய கத்தி மற்றும் கம்பி என்பன அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் கிணற்றுக்குள்ளிலிருந்து மீட்கப்பட்டன.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் இன்று வியாழக்கிழமை கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ம-312)

## விடுதலைப்புலி...

விடுதலைப் புலிகளின் தொலைநோக்கி கருவியொன்று முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இறுதி யுத்தம் நடைபெற்று 10 வருடங்கள் கடந்துள்ள போதும் விடுதலைப் புலிகளின் போர்த்தடயங்கள் ஆனந்தபுரம், இரட்டைவாய்க்கால், முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட பகுதிகளில் காணப்படுகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் வட்டுவாகல் கடற்படையினரின் கட்டுப்பாட்டு பிரதேச வளாகத்திற்கு அருகாமையில் உள்ள தனியார் காணி ஒன்றிலிருந்து சினைப்பர் துப்பாக்கியில் பொருத்தி பயன்படுத்தப்பட்ட விடுதலைப் புலிகளின் தொலைநோக்கி கருவியொன்று காணி உரிமையாளரினால் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

## கீரிமலையில் ஆயிரக்கணக்கில்....



கரையில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டதால் நெரிசல் ஏற்பட்டது.

அதனை பொலிஸாரும், சாரணப் படையினரும் இணைந்து ஒழுங்குக்குள் கொண்டு வந்தனர்.

கடற்கரையில் சாரணர்கள் சிறப்பாக செயற்பட்டு பொது மக்களை கடலின் உட்பகுதிக்குள் செல்ல விடாது பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அத்துடன் கடலுக்குள் இலங்கை கடற்படையினரும் கடற்படைப் படகுகளோடு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

கீரிமலை கடலில் அதிகளவில் கற்கள் காணப்பட்டதால் பிதிர்கடன்களை செலுத்த பக்தர்கள் சிரமப்பட்டனர். (ம-3)

## பழியை என் மீது சுமத்தி தப்பிக்கப்...

அமைதி, சமாதானம் மற்றும் சகவாழ்வுக்கான தேசிய மாநாடு நேற்று கொழும்பு தாமரை தடாக அரங்கில் இடம்பெற்றது.

மேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக் கையில்,

பயங்கரவாத தாக்குதலுடன் நாட்டில் ஏற்பட்டுள்ள இந்தக் குழப்பமான சூழ்நிலையை தமது குறுகிய அரசியல் நிகழ்ச்சிநிரலுக்காகப் பிழையாகப் பயன்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர். ஏப்ரல் 21 தாக்குதல்கள் குறித்து முற்கூட்டியே கிடைத்த தகவல்களை பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரிகள் பொறுப்புடன் நடவடிக்கை எடுக்கவில்லை. என்னை சரியான முறையில் அறிவுறுத்தவில்லை. அவர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ளாமல் இருந்து விட்டு தற்பொழுது நிரபராதிகளாவதற்கு முயற்சிக்கின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடைபெற்று மூன்று மாதங்களுக்குள் சம்பந்தப்பட்ட பயங்கரவாத குழுவை முற்றாக ஒழிக்க முடிந்தது. எந்தவொரு நாடும் இந்தளவு விரைவாக பயங்கரவாத தாக்குதலை தடுத்திருக்கவில்லை. எனது ஆலோசனையின் பிரகாரம் முப்படைகள் பொலிஸாருடன் நாள்தோறும் செயற்பட்டு இதனை மேற்கொண்டோம் என்றார். (ம-3)

## எழுக தமிழ் பேரணியை எதிர்க்க...

வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களின் ஒரே குரலாகவே தமிழ் மக்கள் பேரவையினால் எழுக தமிழ் பேரணி நடத்தப்படவுள்ளது. இந்த பேரணியில் தமிழ் மக்கள் அனைவரும் கலந்துகொள்வார்கள். மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்கள் யாரும் இதனை எதிர்க்க மாட்டார்கள் என ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலே கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றத்துக்கான விசாரணைகள், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை போன்றவற்றுக்காக தமிழர் தாயக பிரதேசங்களில் பல போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் தமிழ் தலைமைகளும் அரசுக்கு முண்டு கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் தமிழர்களின் குரலாக ஒலிக்க தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது. அதன் ஊடாக எழுக தமிழ் பேரணியும் மிக எழுச்சி பூர்வமாக நடத்தப்பட்டது. அந்த எழுச்சி தமிழர்களின் ஒற்றுமையையும் பலத்தையும் தென்னிலங்கை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் பல செய்திகளை சொல்லியிருக்கும். அதே போல இந்த வருடமும் எழுக தமிழ் பேரணி நடைபெறவுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையால் நடைபெறவுள்ள எழுக தமிழ் பேரணி ஒட்டு மொத்த தமிழ் மக்களின் கோரிக்கையாகும். எனவே இந்த பேரணியில் வடக்கு கிழக்கு மக்கள் திரளுவார்கள் அதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. இந்த பேரணியை தமிழ் மக்கள் நலனில் அக்கறை உள்ள எந்த தரப்பும் எதிர்க்காது என்றார். (ம-3)

# ஹிஸ்புல்லா பதவியேற்றால் போராட்டம் வெடிக்கும் - ரத்ன தேரர்

(கொழும்பு)

கிழக்கு மாகாண ஆளுநராக மீண்டும் பதவியேற்கும் ஆசை ஹிஸ்புல்லாக்கு இருந்தால் அதை அவர் உடனே மறக்க வேண்டும். இல்லையேல் மீண்டும் அவருக்கு எதிராக நாம் போராடுவோம். என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் நேற்று தெரி வித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் பதவியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் வழங்கினால் ஏற்றுக்கொள்வேன் என முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா நேற்றுத் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அத்துரலிய ரத்ன தேரர் மேற்கண்டவாறு கூறினார். (ம-3)

## ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு...

தான் இங்கு சஹ்ரான் தாக்குதல் நடத்தியுள்ளார்.

கிரைஸ்ட்சேர்ச் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கவே இந்த தாக்குதலை நடத்தினர் என்ற ஆதாரங்கள் ஒளிப்பதிவுகள் உள்ளதெனவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

இன்று அமெரிக்கா குறித்து பொய்யான குற்றங்களை சுமத்தும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவர்களின் ஜனாதிபதி வேட்பாளராக அமெரிக்க பிரஜை ஒருவரையே களமிறக்கவுள்ளனர் எனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை அவசரகால சட்டத்தை மேலும் ஒருமாத காலம் நீட்டிப்பது குறித்த விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்.

இந்த பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட்டது சஹ்ரான் மற்றும் அவரது குழுவினரால் என்பது தெளிவாக தெரிந்துள்ளது. இதில் சர்வதேச நபர்களின் தொடர்புகள் இல்லை என்பதும் உறுதியாகியுள்ளது. ஐ. எஸ் பயங்கரவாத அமைப்பு இந்த தாக்குதலை நடத்தியதாக கூறினாலும் கூட அவர்கள் இந்த தாக்குதலை நேரடியாக நடத்தவில்லை. அவர்கள் இங்கு சஹ்ரானை வழிநடத்தவும் இல்லை. எனினும் ஐ.எஸ் பயங்கரவாத கொள்கைக்கு இவர்கள் ஈர்க்கப்பட்ட காரணத்தினால் தான் இங்கு சஹ்ரான் தாக்குதல் நடத்தியுள்ளார்.

அதேபோல் கிரைஸ்ட்சேர்ச் தாக்குதலுக்கும் மேலும் இரண்டு சம்பவங்களுக்கும் பழிவாங்கும் வகையில் இந்த தாக்குதலை நடத்துவதாக பயங்கரவாதிகள் சிலரது ஒளிப்பதிவு உரையாடல்களில் கேட்கக்கூடியதாக உள்ளது. ஆகவே ஆதாரங்களை வைத்தே நாம் இதனைக் கூறுகின்றோம் என்றார். (ம-3)

## புலனாய்வு தகவல்களை இராணு...

இலங்கையின் இராணுவதளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரணை செய்யும் பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளிக்கையில் அவர் இதனை தெரிவித் துள்ளார்

தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற புலனாய்வு தகவல்கள் குறித்து இராணுவத்திற்கு தெரிவிக்கப்படாதது குறித்து கவலையடைவதாக இராணுவதளபதி தெரிவித்துள்ளார்.

இராணுவத்திற்கு முன்கூட்டியே தகவல்களை வழங்கியிருந்தால் இது குறித்து முன்கூட்டியே ஆராயப்பட்டிருந்தால் பாதுகாப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து தாக்குதலை தவிர்த்திருக்கலாம் என மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

தாக்குதலின் பின்னர் இராணுவம் உள்ளக விசாரணையொன்றை மேற்கொண்டது என தெரிவித்துள்ள அவர் நாட்டை பாதுகாப்பது இராணுவத்தின் கடமை எனவும் தெரிவித்துள்ளார். (ம-3)

## தமிழ், முஸ்லிம் ஆதரவுடன்...

ஆட்சி விரைவில் மலரும். என முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பிரதான அமைப்பாளருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலிலும் அதன் பின்னர் இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் தரமான - தகுதியான வேட்பாளர்களே போட்டியிடுவார்கள். இரண்டு தேர்தல்களிலும் எமது கட்சியே வெற்றி பெறும். அது இப்போதே நிர்ணயிக்கப்பட்டு விட்டது.

இந்த இரண்டு தேர்தல்களிலும் சிங்கள மக்களுடன் சேர்ந்து தமிழ், முஸ்லிம் மக்களும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு அமோக ஆதரவு வழங்குவார்கள். அவர்கள், தற்போதைய ஆட்சியை வெறுத்துவிட்டார்கள். ஆட்சி மாற்றம் வேண்டும் என்பதில் அவர்கள் குறியாக உள்ளார்கள். எனவே, ஆட்சி மாற்றத்தை விரும்பும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கே பேராதரவு வழங்குவார்கள்.

இனக்கலவரம், மதக்கலவரம் இன்றி மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் நிலையை எமது ஆட்சியில் ஏற்படுத்துவோம்.

மூவின மக்களின் அடிப்படைத் தேவைகள் உட்பட அனைத்துத் தேவைகளையும் நாம் நிறைவேற்றிக்கொடுப்போம். வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் ஓர் உறவுப்பாலத்தை நாம் ஏற்படுத்துவோம் - என்று குறிப்பிட்டுள்ளார். (ம-3)

### கொவிசெத

திகதி 2019.07.31

சீட்டிழுப்பு இலக்கம் 2195

K 05 28 50 63

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 31/07/2019 சீட்டிழுப்பு இலக்கம் 961

ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 8 2 1 3 0 8

விசேட சீட்டிழுப்பு

1415571 1068328 0962443 1183754

### தன நிதானய

திகதி 2019-07-31

சீட்டிழுப்பு இலக்கம் 181

ஆங்கில எழுத்து J 12 26 38 56

### மெகா பவர்

திகதி 2019/07/31

சீட்டிழுப்பு இலக்கம் 0413

B 16 52 61 63 73

## திருகோணமலை...

குளித்து விட்டு சிவாலயத்திற்கு முன் அமைக்கப்பட்டுள்ள மதக் கிரியை நிலையத்தில் அந்தணர்களால் மேற்கொள்ளப்பட்ட கிரியை முறையின் பின் எள்ளும் நீரும் இறைத்து இறந்த தமது தந்தையருக்கான பிதிர்க் கடனை செய்து தான தர்மம் வழங்கும் கருமங்கள் இடம் பெற்றது.

இதேவேளை ஏட்டிக்குப் போட்டியாக அங்கிருக்கும் பௌத்தர்களால் சைத்தி இருக்கும் பகுதியாக குறிப்பிடும் இடமான சிவாலயத்திற்கு முன்னுள்ள மேட்டுப் பகுதியில் பௌத்தபிக்குகளின் அதிஸ்டான பூசை நடத்தப்பட்டது.

அதில் நூற்றுக் கணக்கான பௌத்த மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வு இந்து மக்களின் புனித நிகழ்வான ஆடி அமாவாசை நிகழ்வை குழப்புவதற்காக சில பௌத்த துறவிகள் மற்றும் இனவாதத்தை தூண்டும் அரசியல்வாதிகளின் செயலாகவே நோக்குவதாக இந்நிகழ்வில் கலந்து கொண்ட இந்து பக்தர்கள் கவலை வெளியிட்டனர். (ம-3)

## அவசரகால சட்...

தாரி மாணவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலாகும் என மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று அவசரகால சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்.

பயங்கரவாத தாக்குதல் உலகில் அனைத்து பிரதேசங்களிலும் இடம்பெறுகின்றது. ஆனால் உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக அனைத்து தகவலும் தெரிவித்த பின்னரே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

அதனால் ஏனைய பயங்கரவாத தாக்குதலுடன் இதனை ஒப்பிடமுடியாது.

அத்துடன் அவசரகால சட்டம் இல்லாத நிலையிலே இந்த தாக்குதல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அத்துடன் எதிர்காலத்திலும் பாதுகாப்பு தேவைகளுக்காக அவசரகால சட்டம் தேவை என தெரிவிப்பதில் எந்த அடிப்படையும் இல்லை. அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களை மேற்கொள்பவர்களை தடுக்கவும் உரிமை போராட்டங்களை மேற்கொள்பவர்களை கட்டுப்படுத்தவுமே அரசாங்க்ம் அவசரகால சட்டத்தை பயன்படுத்தி வருகின்றது என அவர் இதன்போது தெரிவித்தார். (ம-3)

## தமிழர்களை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான, விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், தமிழர் பகுதிகளில் வாகனங்களை மறித்து சோதனை செய்கின்றனர். இதன் காரணமாக மக்கள் அவதியுறுகின்றனர். தற்போதும் மக்கள் சுதந்திரமான வாழ்க்கை வாழவில்லை. மக்கள் மீதான தாக்கங்கள் அதிகரிக்கப்படுகின்றன. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக அரசு தெரிவித்திருந்தது. சர்வதேசத்திடமும் வாக்களித்திருந்தது. எனினும் இது வரையில் இந்த விடயம் தொடர்பாக எந்த தீர்வும் எட்டப்பட வில்லை என்றும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார். (ம-3)


A/L 2020&A/L 2021
கணக்கீடு:- MR.BALAKAJEN (Tutorial Staff) (C-7054)
பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
ஆரம்ப தேர்ச்சியில் இருந்து கற்பிக்கப்படும்
தொடர்பு:- 076 565 5956
கந்தர்மடம் (Tue & fri 5-7 pm | கொழும்புத்துறை (Sat & Sun 2-6 pm

துரித தபால்கள் பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
0777 554 528 (C-7109)

கணினி, சிங்களம்
*அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
✓உங்களுக்கு விரும்பிய நேரத்தைத் தெரிவு செய்து கற்க முடியும்.
✓சான்றிதழ்கள் வழங்கப்படும். TP:021-221-5992
New Sky Computer Training Centre
இல.716, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH
கள பயிற்சியுடன் கூடிய 3 மாதக்கற்கைநெறி
தொழில்புரிவோர், தொழில்தேடுவோர், பல்கலை மாணவர்கள்
பட்டதாரிகள் மற்றும் இளைஞர் யுவதிகள் இணையமுடியும்! (7163)
முதலாவது சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் : 03.08.2019 சனி
1.காலை 08-10 2.மாலை 03-05
அனுமதி, புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் இலவசம்
ஆங்கிலத்தில் ஒரு சொல் தெரியாதவர்களும்கூட 3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசலாம்!
ஆங்கிலம் பேசமுடியாவிட்டால் முழுப்பணம் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்
SAAMSON இங்கிலீஸ் வேக் செம்
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.
077 621 4567 021 222 4282

குழு மற்றும் பிரத்தியேக வகுப்புக்கள்
Accounting Zone
(டச்சு வீதி, இருபாலை)
கணக்கீடு (A/L 2020,A/L 2021)
வி.தமிழ்ஈசன் (Tutorial Staff)
076 806 6960
வீடுகளிலும் வந்து கற்பிக்கப்படும். (9766)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2020 ஜனவரி பரீட்சைக்கான
aat (SriLanka)
(AA1, AA2, AA3)
Qualification :- G.C.E. O/L 6 Passes
Medium - Tamil & English
ஆரம்பம் :- 03.08.2019
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382, 021 222 9149 (C-7147)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (9769)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg
0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி
V2 TRAVELS

O/L மாணவர்களுக்கான இலவச செயலமர்வும் வினாவிடை தொகுப்பு வழங்கலும்
சிரேஸ்ட சட்டத்தரணி வேலாயுதன் தேவசேனாதிபதி அவர்களின் அனுசரணையுடனும், வடமாகாண ஆளுனரின் முழு அனுமதி ஆலோசனையுடனும்

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 07.08.2019 புதன் | யாழ். வீரசிங்கம் மண்டபம் (பெண்களுக்கு மட்டும்) | மு.ப.8.00-பி.ப.3.00 |
| 08.08.2019வியாழன் | யாழ். வீரசிங்கம் மண்டபம் (ஆண்களுக்கு மட்டும்) | மு.ப.8.00-பி.ப.3.00 |
| 09.08.2019வெள்ளி | ஊர்காவற்துறை பிரதேச செயலகம். | மு.ப.6.00-பி.ப.3.00 |
| 10.08.2019சனி | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி | மு.ப.6.00-பி.ப.3.00 |
| 11.08.2019ஞாயிறு | யாழ். வீரசிங்கம் மண்டபம் (ஆண், பெண் இருபாலாரும்) | மு.ப.6.00-பி.ப.3.00 |
| 12.08.2019திங்கள் | கிளி.கூட்டுறவு மண்டபம் A9 வீதி | மு.ப.8.00-பி.ப.3.00 |
| 13.08.2019செவ்வாய் | முல்லை. ஊற்றங்கரை விநாயகர் ஆலய மண்டபம் . | மு.ப.8.00-பி.ப.3.00 |
| 14.08.2019புதன் | மாகாண தொழில்நுட்ப பயிற்சிக்கல்லூரி- A9 வீதி மாங்குளம். | மு.ப.8.00-பி.ப.3.00 |
| 15.08.2019வியாழன் | வவுனியா நகரசபை மண்டபம். | மு.ப.8.00-பி.ப.3.00 |
| 16.08.2019வெள்ளி | மன்னார் நகரசபை மண்டபம். | மு.ப.8.00-பி.ப.3.00 |

"அனைத்து O/L மாணவர்களும் கலந்து கொண்டு பயன் பெறவும்"
பிரதம அமைப்பாளர்
கந்தசாமி சக்திதரன் (உதவிக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய் பொதுச் செயலாளர், கல்விஅபிவிருத்தி ஆலோசனை அமையம்)
அனைத்து மாணவர்களும் பாடசாலைச் சீருடையுடன் வருகை தரவும் (C-7157)
தொடர்புகளுக்கு:- 0771133400, 0766443385, 0718561252, 0770703360

SLAS - III Open/Limited வகுப்புக்கள்
மாலைநேர பிரிவு
வியாழன், வெள்ளி, திங்கள், செவ்வாய்
பி.ப 5.00-7.00 மணி வரை
பிரிவு I
பிரதி சனி 9.00-3.30
பிரிவு II
பிரதி ஞாயிறு 9.00-3.30
வளவாளர்கள்
• வழமையான விரிவுரையாளர்
• பாலசந்திரமூர்த்தி
• பௌநந்தி
• கருணதாஸ்
• சத்தியமூர்த்தி
• தெய்வேந்திரம்
• சுபாகரன்
• கலைச் செல்வன்
• தமிழிந்திரன்
• தங்கரூபன்
தொடர்புகளுக்கு : 0766883394,0212223382
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (C-7156)

ஓம் சாய்ராம்
துயர் பகிர்வு
எமது பேரவை செயற்பாட்டவை செயலர் திரு.ம.திலீபன் அவர்களின் தந்தையான
அமரர்
சி.மகாலிங்கம்
(ஓய்வு நிலை நில அளவையாளர்)

அவர்களின் பிரிவுத் துயரில் பங்கெடுப்பதோடு அவர் ஆத்மா சாயிநாதரின் பாத நிழலில் அமைதிபெற பிரார்த்திக்கின்றோம்.
ஸ்ரீசீரடி சாயி பிரார்த்தனை பேரவை
வடமராட்சி கரணவாய். (9762)

பாராட்டி வாழ்த்துகிறோம்
யா/இடைக்காடு மகா வித்தியாலயம் (அச்சுவேலி)
மாணவிகளின் சாதனை
2018 ஆம் வருடம் நடாத்தப் பெற்ற சமூக விஞ்ஞானப்போட்டியில் நாடளாவிய ரீதியிலும், தேசிய மட்டத்திலும் சாதனை படைத்த மாணவிகள்

செல்வி ஜெகந்தன் கவின்சியா தரம்-9
நாடளாவிய ரீதியில் 1ம் இடம்
தேசிய மட்டம் : 1ம் இடம்
சாதனைகள் பல உண்டு
சாதிப்பவர் சிலர்தான் உண்டு
சிறப்பான சாதனையால்
சிகரமாய் உயர்ந்தவர்கள்

செல்வி ஜெகந்தன் கவிநயா தரம்-7
நாடளாவிய ரீதியில் :1 ம் இடம்
தேசிய மட்டம் : 3ம் இடம்
பாராட்டி வாழ்த்தும்
(அம்மப்பா) சி.சபாரத்தினம் - குடும்பத்தினர்
(JP - அகில இலங்கை) C.D.O
கச்சாய் வீதி, கொடிகாமம். (9767)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோர் ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.